ஆசிரியர் : நாரண துரைக்கண்ணன்

## அயர்லந்து தேசத் தலைவர்

# ஏமன் டிவேலரா



மலா வாசக நிலையம்
து. ரெங்கநாதபுரம்
வரிசை நெ. 634/1038
பகுதி நெ.

பிரசுரம் : எம். எஸ். ராமுலு கம்பேனி] [All Rights Strictly Reserved

## நேரு ஹிந்தி முதல் பாடம், இரண்டாம் பாடம்

தமிழ் மூலமாய் ஹிந்தி உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள், கூட்டு எழுத்துக்கள், சிறு வார்த்தைகள், எண்கள் முதலியவை சுலபமாய்க் கற்றுக் கொள்ளலாம். 64-பக்கங்கள் கொண்டது; விலை அணா 2. ஒரு காபி அனுப்ப மூன்று அணா இந்தியா தபால் ஸ்டாம்பு அனுப்பிவைக்கக் கோருகின்றோம். [நேரு ஹிந்தி ஆசான் வாங்குபவர்கள் ஷை புத்தகத்தை வாங்க வேண்டியதில்லை.]

**Nebru Hindi—Telugu 1 & 2 Reader. Price Two Annas**

---

# நேரு ஹிந்தி ஆசான்

அல்லது

## ஹிந்துஸ்தானி ஸ்வபோதினி

[துரைத்தனத்தார் அங்கீகரித்தது]

தமிழ் படிக்கத் தெரிந்த ஒவ்வொருவரும் சிறுவர் முதல் பெரியோர் ஈறாக தங்கள் ஓய்வுக் காலங்களில் தினந்தோறும் அரைமணி நேரம் இப்புத்தகத்தை அப்யசித்து வந்தார்களானால், உபாத்தியாயர் உதவியின்றித் தமிழைக் கொண்டு நாலே வாரத்தில் நல்ல ஹிந்தி பாஷையைச் சப்ததோஷ மில்லாமல் சுலபமாய்ப் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக்கொள்ளக் கூடிய அரிய பெரிய புத்தகம். இப்புத்தகம் ஒன்று கையிலிருந்து விட்டால், பாஷைக் கஷ்டம் என்பது சிறிதுமின்றி உலகத்தையே சுற்றிவந்து விடலாம். ஹிந்திப் படங்களையே பெரிதும் விரும்பும் சினிமா நேயர்களுக்கு இது மிகவும் இன்றியமையாத புத்தகமாகும். வியாபாரிகளுக்கு இப்புத்தகம் ஒரு தோன்றாத் துணைவனாகும். இப்புத்தகம் 22-பெரிய அத்தியாயங்களாய் வகுக்கப்பட்டிருக்கின்றன. தமிழர் யாவரும் இப்புத்தகத்தை வாங்கி வாசித்து பெருமையும் பயனும் அடைய வேண்டி இதற்கு மிகக் குறைவாக விலை வைத்திருக்கின்றோம்.

**விலை அணா 0—12—0**

அணா 0—14—0-க்கு மணியார்டர் அல்லது இந்தியா தபால் ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு காபி அனுப்பி வைக்கப்படும். வி. பி. யில் அனுப்புவதானால் தபாற் செலவு 0—7—0 அணா அதிகமாகும்.

**எம். எஸ். ராமுலு கம்பெனி**

286, அப்பா பில்டிங்ஸ் : : எஸ்பிளனேட், மதராஸ்

ஸ்ரீ

## அயர்லந்து தேசத் தலைவர்

# ஏமன் டிவேலரா

### 1. எமன் வாயிலிருந்து தப்பிய ஏமன்

**அயர்லந்து அமர்க்களமாய் இருந்தது.** முக்கிய நகரங்களெல்லாம் கலகமுங் குழப்பமுமாய் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண் டிருந்தது. எங்கும் துப்பாக்கி வெடி சப்தமும், பீரங்கிக் குண்டுகளின் அதிர் வெடி யோசையும் பயங்கரமாக முழங்கி மக்களைக் கதிகலங்கிச் சிதறியோடச் செய்தன. பல இடங்களில் ஐரிஷ் குடியரசுக் கட்சித் தொண்டர் படையினரும், பிரிட்டிஷ் இராணுவப் படையினரும் கைகலந்து சண்டை செய்தனர். சில இடங்களில் இருதிறத்தாரும் பதுங்கியிருந்து ஒருவரை யொருவர் துப்பாக்கி, பீரங்கிகளால் தாக்கிக்கொண் டிருந்தனர்.

அயர்லந்து மக்கள் சிறிதும் எதிர்பாரா வகையில் திடீரென்று 1916-ம் ஆண்டில் நாட்டின் சுதந்திரம் வேண்டி, குடியரசுக் கட்சியினரும், அதைச் சேர்ந்த தொண்டர் படையினரும் கிளப்பிய சுதந்திரக் கிளர்ச்சியின் எதிரொலியே மேற்குறித்தவாறு பயங்கரக் கலகமாகப் பரிணமித்தது. குடியரசுப் படையினர் கிளர்ச்சியை அடக்க அதிகார வர்க்கம் எடுத்துக்கொண்ட இராணுவ நடவடிக்கையே,

தொண்டர் படையினரையும் பிரிட்டிஷ் இராணுவப் படையினரையும் ஒன்றேடொன்று மோதச் செய்தது.

சுதந்திர ஆர்வத்தோடு ஐரிஷ் குடியரசுப் படையினர் எவ்வளவுதான் வீராவேசத்தோடு போராடினாலும், சர்வ சக்தி வாய்ந்த பிரிட்டிஷ் இராணுவப் படையின்முன், எண்ணிக்கையில் மிகக் குறைந்த அவர்கள் ஆற்றல் எம்மாத்திரம்! இயந்திரப் பீரங்கி முதலிய பெரிய ஆயுத பலத்தைக் கொண்டு, அவர்கள் குடியரசுப் படையினரின் கலகத்தை அடக்கி விட்டனர். சுதந்திரக் கிளர்ச்சியைத் தூண்டிவிட்ட குடியரசுக் கட்சித் தலைவர்களே, சர்க்காரின் படை பலத்துக்குத் தங்கள் படையினரை மேலும் பலியாக வொட்டாதவாறு தடுக்க வேண்டி, கிளர்ச்சியை நிறுத்திவிடச் செய்தனர். எனினும், கலகத்தில் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களை யெல்லாம் சர்க்கார் சிறை பிடித்துக்காவலில் வைத்தனர்.

குடியரசுக் கட்சித் தலைவர்களாயுள்ளவர்களும், கிளர்ச்சி எழுவதற்குமுன், ஐரிஷ் மக்களுக்கு அறிக்கை வெளியிட்டவர்களுமான ஏழு பேரும், மற்றும் எட்டுபேரும் மரண தண்டனைக் காளாயினர். வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டதுமே, அவர்கள் அனைவரும் இராணுவப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அயர்லந்தின் தலைநகரான டப்ளினில் சுதந்திரக் கிளர்ச்சியை நடத்திய தொண்டர் படைக்குத் தலைமைவகித்த ஒருவருக்கும் மரணதண்டனையே விதிக்கப்பட்டது. ஆனால், எக்காரணத்தாலோ அவரது தண்டனை உடனே நிறைவேற்றப்படவில்லை. இதனிடையே, அக்கலகத் தலைவர் ஐரிஷ் பிரஜையல்ல என்றும், அமெரிக்காவில் பிறந்தவராதலால், அமெரிக்கப் பிரஜை யென்றும் தகவல் கூறப்பட்டது. மேலும், அமெரிக்க ஸ்தானீகர் இதை வற்புறுத்தி, அவரது தண்டனையை நீக்கவேண்டுமென்று வாதாடினர். எனவே, பிரிட்டிஷ் அரசாங்கம் சிறிது யோசனை செய்தது. பின்னர், அத்தலைவருக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனையை ஆயுள் பரியந்தம் சிறைவாசத் தண்டனையாக மாற்றினர்.

இவ்விதம் அம்மனிதரது நல்லதிர்ஷ்ட வசமாகவோ தேசத்தின் அதிர்ஷ்டவசமாகவோ மரணதண்டனையி னின்றுந் தப்பி எமன் வாயிலிருந்து மீண்ட இம்மனிதர் யார்? இவர் எமனுக்கு எமனுகவே இருக்கவேண்டும். இவர் உண்மையிலேயே எமன்தான். ஏமன் டிவேலரா என்பது இவருடைய முழுப்பெயராகும். ஐரிஷ் பாஷைப் பெயராகிய ஏமன் டிவேலராவை, தமிழ்ப் பத்திரிகாசிரியர் சிலரும் பிறரும் எமன் டிவேலரா என்றும் ஈமன் டிவேலரா என்றும் எல்லாம் எழுதியும் கூறியும் வருகின்றனர். ஏமன் டிவேலரா எப்படி இச்சுதந்திரக் கிளர்ச்சியில் சேர்ந்தார்? அவர் ஒரு கலாசாலை ஆசிரியராய் இருந்துவந்தவர். சுதேசப் பற்று மிகுந்தவர். சுதேச பாஷையாகிய ஐரிஷ் மொழி வளர்ச்சியில் ஆர்வ மிகவுடையவர். ஆகவே, அவர் முதலில் ஐரிஷ் மொழி மறுமலர்ச்சிக்கான முயற்சியில் ஈடுபட்டார். இவ்வீடுபாடு அவரைக் குடியரசுக் கட்சித் தொண்டர் படையில் கொண்டு போய்ச் சேர்த்தது. அப்படி யிருந்தும், அவர் அரசியல் விஷயத்தில் அதிக ஆர்வங் காட்டவில்லை. ஆனால், கால நிலைமையும் தேச நிலைமையும் அவரை அரசியல் கிளர்ச்சியில் பெரும் பங்கு எடுத்துக்கொள்ளும்படி செய்துவிட்டன.

1916-ம் வருஷத்தில் ஐரோப்பிய மகா யுத்தம் உச்ச நிலையை யடைந்து, பிரிட்டனுக்குப் பெரிய நெருக்கடி யேற்பட்டது. இந்நிலைமையைத் தங்கள் சுதந்திரக் கிளர்ச்சிக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளக் கருதினர் குடியரசுக் கட்சியினர். பிரிட்டிஷ் சர்க்கார் வாக்குறுதி யளித்திருந்தபடி இதுவரை ஐரிஷூக்குச் சுயாட்சி வழங்கா திருந்து வருவதும், சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டையாக இருந்துவரும் அல்ஸ்டர் மாகாண வாசிகளுக்கு அரசாங்கம் அதிக சலுகை காட்டிவருவதும் குடியரசுக் கட்சியினர்க்கு ஆத்திரத்தை யுண்டுபண்ணியது. அல்ஸ்டர் மாகாண வாசிகள் திரட்டி வந்த தொண்டர் படைக்கு விசேஷ சலுகை காட்டப்பட்டு அது பெருக்க மடைவதற்குரிய பல சௌகரியங்கள் செய்து தரப்பட்டன. ஆகவே, அப்படையின் ஆர்ப்பாட்டம் சொல்லுந் தரத்ததாயில்லை. இதன் கொட்டத்தை யடக்க குடியர

சுக் கட்சியாரும் ஒரு தொண்டர் படையைத் திரட்ட வேண்டியதாயிற்று. ஆனால், இதற்கு அரசாங்கத்தின் அமுல் அதிகமா யிருந்தது. இப்படையை நசுக்கப் பலவிதமான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு சதா தொல்லை கொடுத்து வந்தனர். மேலும், ஆங்கில அரசாங்கத்தார் அல்ஸ்டர் மாகாண வாசிகளின் கோரிக்கைக் கிணங்க, அல்ஸ்டரைப் பிரித்துவிட்டு, அயர்லந்தின் தென்பகுதிக்கு மட்டும் சுயாட்சி யளிக்க எத்தனித்தனர். இதெல்லாம் பொதுவாக ஐரிஷ் மக்களுக்கும், சிறப்பாகக் குடியரசுக் கட்சியினர்க்கும் மனக் கொதிப்பை யுண்டாக்கிக்கொண்டு வந்தது. ஆகவே, குடி யரசுக் கட்சியினர் யுத்தத்தில் பிரிட்டன் சங்கட நிலையை யடைந்திருக்கும் சமயம் பார்த்து சுதந்திரப் போராட்டந் தொடங்க முன்வந்ததில் ஆச்சரியமொன்றுமில்லை. 18,000 தொண்டர் படையினர் குடியரசுக் கட்சியின் ஆதிக்கத்தில் இருந்ததால், அதன் தலைவர்கள் சிறிது தைரியமாக தேசமக்க ளுக்குச் செய்திசொல்லும்வகையில் அறிக்கையொன்று வெளி யிட்டு, சுதந்திரப் போரில் இறங்கினர். இது மிகத் தீவிரமான நடவடிக்கையென்று அக் கட்சித் தலைவர்களிலேயே ஒருவர் அபிப்பிராயப்பட்டு, தற்போது, சுதந்திரப் போர் வேண்டாம் என்று தொண்டர் படையினர்க்கு மறு உத்தரவு விதித்தார். இதன் பயனாக, 17,000 தொண்டர்கள் சுதந்திரப் போரில் கலவாது ஒதுங்கிவிட்டனர். எனினும், குடியரசுக் கட்சித் தலைவர்கள் மனந்தளராது, முன்வைத்த காலைப் பின்வைக் காது, ஆயிரந் தொண்டர்களைக்கொண்டே போர் தொடங்க லாயினர்.

நமது டிவேலராவும் சுதந்திரப் போராட்டத்துக்கு இது தகுந்த காலமில்லை என்றே கருதினர். கலக மெழுப்பிக் காரியத்தைச் சாதித்துக்கொள்ள முயல்வதில் அவருக்குச் சிறிதும் விருப்பமே கிடையாது. ஆயினும், அவர் கட்சித் தலைவர்கள் கட்டளைக்குக் கட்டுப்பட்டு, சுதந்திரப் போராட் டத்தில் கலந்துகொண்டார். கட்சித் தலைவர்கள் ஒரு சிறு தொண்டர் படைக்கு அவரைத் தலைவராக்கி டப்ளின் நக ருக்கு அனுப்பினர். டிவேலரா சிறிதுந் தயங்காது படையை

நடத்திச் சென்று, தலைநகரின் மத்தியில் ரயில்வே ஸ்டேஷன் சமீபத்தில் அணிவகுத்து நிற்கச் செய்து போரை ஆரம்பித்தார். இவ்விடம் மறைந்திருந்து போர் புரிவதற்கு ஏற்ற இடமா யிருந்தது. டிவேலரா போரை நடத்திய விதமே ஆச்சரியப் படத்தக்கதா யிருந்தது. கலாசாலை ஆசிரியரா யிருக்கும் ஒருவர் இவ்வளவு சாதுரியமாகப் போரை நடத்துவாரென்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது. நீண்ட காலம் போர்க்களத்தில் உழன்று பழகின தளபதியைப்போல், டிவேலரா போர்த்திறமையையும் ஆற்றலையுங் காட்டித் தம் படையுடன் போர்புரிந்து வந்தார்.

இதனிடையே, நிரபராதிகளான தேசமக்கள் உயிர்க் கொலைக்கும் கஷ்டநஷ்டங்களுக்கும் ஆளாவதைக் கண்டு குடியரசுத் தலைவர்கள் இப்பயங்கர நிலைமையை மேலும் நீடிக்க விரும்பாது தாங்கள் தொடங்கிய சுதந்திரப்போரை நிறுத்தத் தீர்மானித்து விட்டனர். அவர்கள் கட்டளைப்படி பல பாகங்களிலுமுள்ள படைத்தலைவர்கள் போரை நிறுத்தி விட்டனர். ஆனால் டிவேலராவுக்கு உத்தரவு பிறந்த இரண்டாவது நாள் சாயங்காலந்தான் செய்தி கிடைத்தது. அது வரை அவர் தம் படையுடன் தனித்து நின்றே போர்புரிந்து வந்தார். ஒருமுறை தொடங்கிவிட்ட சுதந்திரப்போரை இவ் விதம் இடையில் நிறுத்துவதில் டிவேலராவுக்கு இஷ்டமில்லை. ஆயினும் தலைவர்கள் கட்டளைக்குத் தலைவணங்கினர். அவர் போரை நிறுத்துஞ் சமயத்தில் பிரிட்டிஷ் இராணுவப்படை வந்து சிறை பிடித்துச் செல்லும் நோக்கத்தோடு அவரையும் படையினரையும் சூழ்ந்துகொண்டது. அந் நிலையிலும் டிவேலரா அஞ்சாது, தம்மை ஆத்திரத்தோடு நோக்கிய ஆங்கில தளபதியைப் பார்த்து, "என்னை வேண்டுமானல் இப்போதே சுட்டுக்கொல்லலாம். ஆனால் படுகாயமடைந்துள்ள என் சகாக்களுக்கு முதலில் சிகிச்சை செய்யுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

* * * *

"அயர்லந்து தேசம் ஸ்பானிஷ் மனித னொருவனல் காக்கப்படும்" என்பது, எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்

அயர்லாந்தில் வாழ்ந்த மலர்ங்சி என்ற மகான் ஒருவர் தீர்க்க தரிசனமாக எழுதி வைத்துவிட்டுச் சென்ற சத்திய வாக்கு களில் ஒன்று. இதற்கு என்ன கருத்து என்று அயர்லந்து மக்கள் அடிக்கடி சிந்தித்து ஆச்சரியப்படுவதுண்டு. ஆனால், ஏமன் டிவேலராவால் அயர்லந்து சுதந்திர மடைந்ததைக் கண்ட பிறகுதான், அத்தேச மக்களுக்கு மேற்குறித்த பெரி யாரின் ஆப்த மொழியின் உண்மை விளங்கலாயிற்று. டிவேலராவின் அருமைத் தந்தையான விவியன் டிவேலரா ஒரு ஸ்பானிஷ் பிரஜை. தாய் காதரைன்தான் ஐரிஷ் பெண்மணி. எனவே, ஏமன் டிவேலரா பிறப்பினால் ஸ்பானிஷ் மகனேயன்றோ! ஆனால், சிறிது கூர்ந்து நோக் கினால், விவியன் டிவேலராவும், அடிமை நாட்டில் அல்லல் பட்டுக்கொண்டிருக்க இயலாது வெளிநாடுகளுக்குச் சென்று விட்ட ஐரிஷ் குடும்பங்களில் ஒன்றில் உதித்தவரே என்பது புலப்படும். இவர் தம் மூதாதையரைப் பின்பற்றி, ஸ்பெயி னில் படைத் தலைவராக இருந்து வாழ்ந்து வந்தார். பின்னர், அவர் எக்காரணத்தாலோ அமெரிக்காவை அடைந்து தலை நகரான நியூயார்க்கில் குடியேறிப் பாட்டு பாடுவதைத் தொழி லாகக்கொண்டு நல்வாழ்வு நடாத்திவந்தார். இங்குதான், அவர் தம் வாழ்க்கைக்கு அருந் துணைவியாக, காதரைனைத் தேர்ந்தெடுத்துக் கலியாணஞ் செய்துகொண்டார். இவர்கள் இருவரும் இனிது நடத்திவந்த காதல் வாழ்க்கையின் பயனாக, 1882-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ந் தேதியன்று ஏமன் டிவேலரா பெற்றோர் மனங்களிக்கப் பிறந்தார். இவருக்குப் பிள்ளைத் திருநாமமாக எட்வர்ட் எனப் பெற்றோர் வைத் தனர். இது ஐரிஷ் மொழியில் ஏமன் என்றாகி, அதுவே பெயராகப் பிரபலமடைந்துவிட்டது. தம் பிள்ளையின் பிற் காலப் பிரசித்தியைக் காணக் கொடுத்து வைக்காது விவியன் டிவேலரா இரண்டு ஆண்டுக்கெல்லாம் ஏமனை அநாதையாக விட்டு இவ்வுலக வாழ்வை நீத்தார். உலகானுபவத்தை இன்னுஞ் சரியாக உணராத காதரைன், பாவம்! பச்சிளங் குழந்தையை வைத்துக்கொண்டு என் செய்வாள்! ஆகவே, அவள் அயர்லந்துக்குப் பிரயாணப் பட்டுக்கொண்டிருந்த

சகோதர னொருவனுடன் தன் அருமை மகவைக் கூட்டி யனுப்பினாள். எனவே, ஏமன் அயர்லந்தில் லிமரிக் என்னு மிடத்தில் மாமன் வீட்டில் வளர்ந்துவந்தார். இயற்கையி லேயே அவர் நுண்ணறிவும் வீரமுங் கொண்டு விளங்கிய மையால், விளையாட்டுப் பருவத்திலும் கல்வியைச் சிரம மின்றிப் படித்துச் சிறப்புற்று வந்ததிலும், நெப்போலியன் போன்ற மகா வீரர்களின் மாட்சி மிக்க சரித்திரங்களை ஆர் வத்துடன் வாசித்து வந்ததிலும் ஆச்சரியமொன்றுமில்லை.

ஏமன் டிவேலரா முறையே படித்து உயர்தரப் பள்ளி யின் முடிவுப் பரிட்சையில் முதன்மையாகத் தேர்ந்தார். ஆகவே, அவரது அறிவாற்றலைப் பாராட்டி, அப்பள்ளிக்கூட அதிகாரிகள் அவரைக் கணித ஆசிரியராக நியமித்தனர். டிவேலரா இவ்வளவோடு திருப்தி யடையாது ஆசிரியத் தொழில் புரிந்துகொண்டே, பிரத்தியேகமாகப் படித்து பி. ஏ., எம். ஏ, பட்டங்களை முறையே பெற்றார். ஆரம்பத் தில் கணித ஆசிரியரா யமர்ந்த அவர், கல்வியுயர்வு காரண மாக, கணிதம், பூதத்துவ சாஸ்திரம் ஆகியவைகளைப் பயில் விக்கும் ஆசிரியராகிக் கடைசியில் டப்ளின் கலாசாலை யொன்றில் கணிதப் பேராசிரியரானார்.

இதன் பிறகே, டிவேலரா ஐரிஷ் மொழியைக் கற்றார். இம்மொழியைப் பயில்விக்க டப்ளினில் ஒரு சங்கமிருந்தது. அச்சங்கத்துக்குச் சென்று படித்துவந்த டிவேலரா, அங்கே ஆசிரியையா யிருந்த ஜேனட் பிளாங்கன் என்னும் பெண் மணிமீது காதல் கொண்டார். அம்மங்கையும் டிவேலராவை மிகவும் நேசித்ததால், இருவரும் 1910-ம் வருஷத்தில் திரு மணஞ் செய்துகொண்டனர்.

டிவேலரா ஆரம்பத்தில் அரசியலில் அக்கரை கொள் ளாதிருந்து வந்தார்; ஆயினும், சுதேசப் பற்றுடையவரா யிருந்தார். அயர்லந்தில் உற்பத்தியாகும் சுதேசித் துணி மணிகளையும், பொருள்களையும் உபயோகித்து வரலானார். அவருக்குக் காதலியாக வாய்த்த ஜேனட் பிளாங்கனும் இக் கொள்கையே கொண்டு, அவருடன் ஒத்துழைத்து வந்தது

குறிப்பிடத் தக்கது. தம்பதிகள் இருவரும் சமூக சீர்திருத்தம், கல்வி சீர்திருத்தம் ஆகிய விஷயங்களில் ஆர்வமுடையராய், அவை சம்பந்தமாக நடைபெறும் கூட்டங்களிலும், சங்கங்களிலும் கலந்துகொள்ள லாயினர். இவ்விதம் காதலரிருவரும் கருத்து ஒருமித்து இருந்து இல்வாழ்க்கையை நடத்தி வந்ததோடு, முறையே நான்கு பிள்ளைகளையும் மூன்று பெண்களையும் பெற்று மகிழ்ந்தனர்.

## 2. சுதந்திரப் போரில் சிறைவாசம்

அயர்லந்து சுதந்திரக் கிளர்ச்சி நீண்ட காலமாக நடந்துவந்ததன் பயனாக, பிரிட்டிஷ் சர்க்கார் அதற்குச் சுயாட்சி தருவதாக வாக்குறுதி யளித்தனர். இவ்விதஞ் சுயாட்சி யளிக்கப்படுவதை எதிர்த்து நின்றனர்; அல்ஸ்டர் மாகாணத் தலைவர் ஸர் எட்வர்டு கார்ஸன் என்பாரும் அல்ஸ்டர் தொண்டர் படையினரும். சுயாட்சியினால் சுகவாழ்வு பெறலாம் என்று எண்ணி மகிழ்ந்திருந்த அயர்லந்து மக்களுக்கு அல்ஸ்டர் மாகாண மக்களின் பிற்போக்கு மனோபாவத்தைக் கண்டு மிகுந்த ஆத்திரமுண்டாயிற்று. ஆகவே, ஐரிஷ் வாலிபர் ஒருசிலர் சேர்ந்து அல்ஸ்டர் தொண்டர் படையைப் போன்று ஒரு தொண்டர் படையைத் திரட்டினர். ஐரிஷ் மொழியை வளர்ச்சி செய்யும் நோக்கத்தோடு பாடுபட்டு வந்த பாட்ரிக் பியர்ஸ் என்பவரும் அவரது குடியரசுக் கட்சித் தோழர்கள் சிலருஞ் சேர்ந்து கல்லூரி மாணவர்களைத் தொண்டர்படையில் சேர்க்க முயன்றனர். இதன் பொருட்டு நடைபெற்ற ஒரு கூட்டத்திற்கு நமது டிவேலரா விஜயஞ்செய்தார். தொண்டர்படை திரட்டுவதன் அவசியத்தையும் நோக்கத்தையும் அக்கூட்ட நடவடிக்கை வாயிலாக அறிந்த அவர் உடனே அப்படையில் சேர்ந்து கொண்டார். பின்னர் அவர் அப்படையின் ஒரு பிரிவுக்குத் தலைவராகித் தொண்டர்களுக்குத் தக்க பயிற்சி யளித்து வந்தார். ஆனால், அவருக்கு இத்தொண்டர் படை குடியரசுக் கட்சியோடு தொடர்புடையதென்று தெரியாது. குடியரசுக் கட்சியைப் பற்றியும் அவர் சிறிதும் அறியமாட்டார்.

1916-ம் ஆண்டில் ஐரிஷ் குடியரசுக் கட்சித் தொண்டர் படைக்கும் ஆங்கில அரசாங்க இராணுவப் படைக்கும் சண்டை நடக்க விருந்த தருணத்தில்தான் டிவேலரா குடியரசுக் கட்சியில் சேர்ந்தார். இந்நூலின் தொடக்கத்தில் குறிப்பிட்டபடி, குடியரசுக் கட்சித் தலைவர்கள் சர்க்காரை எதிர்த்துக் கலகஞ் செய்யவேண்டு மென்று கட்டளையிட்டதும், தனிப்பட்ட முறையில் தமக்குச் சம்மதமில்லாதிருந்தும், அதற்குக் கட்டுப்பட்டுத் தம் ஆதிக்கத்தில் விடப்பட்ட தொண்டர் படையைக் கொண்டு போர்புரிந்து முடிவில் தண்டனை யடைந்தார். அதிர்ஷ்ட வசமாக, மரணதண்டனைக்குத் தப்பி, தீவாந்திர சிக்ஷைபெற்று, இங்கிலாந்தில் உள்ள ஒரு சிறைச்சாலையில் கொண்டுபோய் வைக்கப்பட்டார். இவரைப் போன்றே, ஸின்பீன் இயக்கத் தலைவரான ஆர்தர் கிரிப்பித் என்பவரும், மற்றும் கலகத்தில் சம்பந்தப்பட்டிருந்ததாகச் சந்தேகிக்கப்பட்ட ஐரிஷ் மக்கள் பலரும் காவற் கைதிகளாகச் சிறை வைக்கப்பட்டனர். ஆயினும், கலகம் அடங்கவில்லை. தங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் சிறைச்சாலை யதிகாரிகள் சரியாகச் செய்து தராததைக் கண்ட டிவேலரா தம்முடனிருந்த கைதிகளைக் கிளப்பிவிட்டுக் கிளர்ச்சி செய்யவைத்தார். ஆகவே, இக்கிளர்ச்சிக்கு மூலகாரணரான டிவேலராவைச் சிறையதிகாரிகள் வேறு சிறைச்சாலைக்கு மாற்றினர்.

இவ்விதஞ் சிலநாள் கழிந்தன. சிறையதிகாரிகள் எது கருதியோ ஐரிஷ் கைதிகள் எல்லோரையும் ஒரு சிறைச்சாலையிலேயே வைத்தனர். இது கைதிகளுக்கு ஒருவிதத்தில் நன்மையாய் முடிந்தது. அவர்கள் ஒருவரோடொருவர் பழகி ஐக்கிய மனோபாவங் கொண்டனர். தாங்கள் விடுதலையான பிறகு மேற்கொண்டு செய்யவேண்டிய வேலைத்திட்டங்களை வகுக்க அவர்கள் வெகுவாக யோசித்து ஒருவித முடிவுக்கு வந்தனர். இவ்வேலைத் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதற்காக ஒரு கமிட்டியை ஏற்படுத்தி அதன் கட்டளைப்படி மற்றவர்கள் காரியங்களைச் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால், இம்முடிவுப்படி காரியம் நடக்கவில்லை. கமிட்டியில் அடிக்கடி அபிப்பிராய பேதமும்

மாற்சரியமும் ஏற்படலாயின. எனவே, உலகாநுபவமும் முதிர்ந்த பேரறிவும் வாய்ந்த ஒரு சிலர், தலைவரொருவர் இருந்தால்தான் கமிட்டி காரியங்களைச் செம்மையாகச் செய்ய முடியுமென்று யோசனை கூறினர். எல்லோரும் அதை ஒப்புக்கொண்டு நம் டிவேலராவைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். அவர் தாம் தலைவரா யிருக்க முடியாதென முதலில் மறுத்தாராயினும், பெரும்பாலார் வற்புறுத்தலின்மீது முடிவில் ஏற்றுக்கொண்டார். ஆஷ் என்பவர் உபதலைவரானார்.

இங்கிலையில், ஒரு ஐரிஷ் கைதி தவறான காரியமொன்று செய்து சிறை விதியை மீறினா ரென்பதற்காக, சிறை யதிகாரிகள் ஒரு சிறு ரொட்டியும் நீரும் மட்டுமே கொடுக்கலாயினர். இது அநீதியான தண்டனை என்று கருதிய டிவேலரா கைதிகளெல்லாம் வேலை செய்யாது சத்தியாக்கிரகஞ் செய்யவேண்டுமென்று தலைவரென்ற ஹோதாவில் கட்டளையிட்டார். அவ்விதமே எல்லாரும் வேலை செய்யாது வாளா உட்கார்ந்துவிட்டனர். இச் செயல் சிறையதிகாரிகளுக்குத் திகைப்பை யுண்டுபண்ணிவிட்டது. அவர்கள் வேறு வழியின்றி, டிவேலராவுடன் சமரசப் பேச்சு நடத்தி, இந்நெருக்கடியைத் தீர்த்துக்கொண்டனர். இவ்வெற்றி கைதிகளிடையே டிவேலராவுக்குச் செல்வாக்கை யுண்டு பண்ணியது என்பதைக் கூறவும் வேண்டுமோ!

சிறையில் நிலைமை இவ்விதமிருக்க, வெளியே ஐரிஷ் பொது மக்கள் நிலைமை என்ன? அவர்கள், திடீரென ஏற்பட்ட இக்கலகத்தைக் கண்டு திகைப்பும் பீதியுங் கொண்டனர். இக்கலகத்துக்குக் காரணம் என்ன? இதில் சம்பந்தப்பட்டவர்கள் யார் எனப் பலர் அறிய முயன்றனர். பொதுஜன அமைதியைக் குலைத்ததாக எண்ணி, சிலர் கலகக்காரர்மீது கோபங் கொண்டனர். குடியரசுக் கட்சியைப் பற்றியோ, தொண்டர் படையினரைப் பற்றியோ ஜனங்களில் பெரும்பாலாருக்குத் தெரியாது. குடியரசுக் கட்சியும், தொண்டர் படையும் இரகசியமாக வேலை செய்துவந்ததே இதற்குக் காரணமாகும். ஆனால், ஸின்பீன் சங்கம் பகிரங்கமாக வேலை செய்துவந்ததால் அதைப்பற்றி ஜனங்களுக்கு நன்கு தெரியும். ஆதலால்

இக் கலகத்துக்கு ஒரு வேளை ஸின்பீன் சங்கமே மூல காரணமா யிருக்குமோ என்று பலர் சந்தேகித்தனர். எப்படியோ, கலகம் நிகழ்ந்த காலத்தில் பொதுவாக ஐரிஷ் மக்களுக்குக் கலகக்காரர்கள் விஷயத்தில் அநுதாபமோ ஆதரவோ கிடையாது. எனவே, கலகக்காரர்களை அடக்க முயன்ற ஆங்கில சர்க்காரது நடவடிக்கை நியாயமானதெனக் கருதிப் பலர் ஆதரவு காட்டியதில் ஆச்சரிய மொன்றுமில்லை. ஆனால், கலகத்துக்குப் பின்னர் நிலைமை மாறிவிட்டது. கலகம் நிகழ்ந்தபோது அதை யடக்கி அமைதி யேற்படுத்துவதற்குச் சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை சரிதான்; ஆனால், கலகம் ஓய்ந்த பின்னரும், சர்க்கார் கலகத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மீது மட்டுமல்லாது, வீண் சந்தேகங் காரணமாக நிரபராதிகள் மீதும் அடக்குமுறையைப் பிரயோகித்து வருவதைக் கண்ட பிறகு, ஐரிஷ் மக்களுக்குக் கலகக்காரர்மீது அநுதாபமும், சர்க்கார்மீது ஆத்திரமும் உண்டாயிற்று. ஆகவே, அவர்கள் தங்கள் தேச விடுதலை குறித்து கலகஞ்செய்த தலைவர்கள் மீது அன்பு கொண்டனர். அவர்கள் அநியாயமாக அந்நிய அரசாங்கத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டு மாண்டனரே என்று ஆறுத் துயருற்றனர். அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பிச் சிறைவாசஞ் செய்யும் நமது டிவேலராமீது தங்கள் அன்பு முழுவதையுஞ் செலுத்தலாயினர்.

இங்ஙனம், வெளியே பொதுமக்க ளிடையிலும் சிறையிலும் டிவேலராவின் புகழும் செல்வாக்கும் மிகுந்து வருஞ் சமயத்தில், குடியரசுக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான **மைக்கேல் காலின்ஸ்** தம் கட்சியைப் பலப்படுத்தும் முயற்சியில் மிக முனைந்து வேலை செய்துவந்தார். அரசாங்கத்தின் கண்களுக்கு அகப்படாது தப்பி வருபவர்களில் அவர் ஒருவர். அவர் ஜகஜ்ஜால சித்தர். தாம் எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிப்பதில் வல்லவர். அஞ்சாநெஞ்சமும் பேராற்றலுமுடைய வீரர். அவர் அச்சமயம் தேசியவாதி யொருவர் வகித்துவந்த ஸ்தானங் காலியானது காரணமாக காமன்ஸ் சபைக்கு ஏற்பட்ட உபதேர்தலில் சிறைவாசஞ் செய்பவர்

களில் ஒருவரை அபேட்சகராக நிறுத்தி வெற்றிபெறவேண்டு மென்றும், இது அந்நிய அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு ஒரு அறைகூவலாக இருக்குமென்றும் கருதினர். ஆனால், அவர் இது விஷயமாக முதலில், டிவேலரா முதலியவர்க ளோடு கலந்து யோசிக்க விரும்பினர். ஆகவே, அவர் தம் கருத்தைச் சிறையினுள் இருப்பவர்களுக்கு இரகசியமாக எட்ட விட்டார். டிவேலரா முதலியவர்கள் காலின்ஸின் கருத்தை அங்கீகரிக்கவில்லை. எந்த வகையிலும் பிரிட்ட னுடன் தொடர்பு கொள்ளக்கூடாதென்று அவர்கள் அபிப் பிராயப்பட்டனர். தேசியவாதிகள் என்று பெயர் வைத்துக் கொண்டு ஐரிஷ் மக்களை ஏமாற்றித் தேசத்துரோகஞ் செய்து பட்டம், பதவி பெற்றுவரும் ஒரு கூட்டத்தைப் பூண்டோடு ஒழிக்க வேண்டுமென்று தம்முள் சபதஞ்செய்து கொண் டிருந்த காலின்ஸ், டிவேலரா முதலியவர்களின் அபிப்பிராயங் களை ஏற்றுக்கொள்ளவில்லை. தம் தீர்மானப்படியே காரியங் களைச் செய்யலானர். ஐரிஷ் மக்களின் மனேபாவம் பண் பட்டிருந்த நிலையில், காலின்ஸின் விடாமுயற்சி எளிதில் வெற்றிபெற்றது. அவர் கருதியபடியே, சிறையிலுள்ள கைதி யொருவரை அபேட்சகராக நிறுத்தித் தீவிரமாக வேலை செய்து ஐரிஷ் தேசிய வாதக் கட்சியை முறியடித்து பெரு வெற்றி கொண்டார். இச்செய்தி சிறையிலிருந்தவர்களுக்குப் பெரு மகிழ்ச்சியையே அளித்தது என்பதைக் கூறவும் வேண்டுமோ!

இதனிடையே சிறைச்சாலையில் ஐரிஷ் கைதிகளுக்கு மீண்டும் தொல்லை ஏற்பட்டது. ஆகவே, தலைவர் டிவேலரா யோசனைப்படி அவர்கள் சிறை யதிகாரிகளின் அட்டூழியங் களைக் கண்டிக்கும் முறையில் எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். அதிகாரிகள் இதற்குப் பரிகாரந் தேடுவதற்குப் பதிலாக, டிவேலராவையும் மற்றுஞ் சில கைதிகளையும் வேறு சிறைச் சாலைக்கு மாற்றினர். அங்கும், ஐரிஷ் அரசியல் கைதிகள் கௌரவமாகவும் சௌகரியமாகவும் நடத்தப்படவில்லை. இவ் விஷயங்களெல்லாம் வெளிதேசங்களுக்கு எட்டி வந்ததால், ஐரிஷ் மக்களின் கோரிக்கையைக் கவனித்து தக்க நடவடிக்கை

யெடுத்துக் கொள்ளவேண்டுமென்று அமெரிக்கா பிரிட்டனை வற்புறுத்தி வந்தது. எனவே,பிரிட்டன் ஐரிஷ் தேசமக்களின் அங்கீகாரம் பெற்று அயர்லந்தின் அரசியலை அமைக்க வேண்டிய முயற்சி யெடுத்துக் கொண்டது. கலகத்துக்கு மூல காரணம் எனக் கருதிய ஸின்பீன் சங்கம் உட்பட பல அரசியல் ஸ்தாபனங்களையும் பிரிட்டிஷ் சர்க்கார் அழைத்து ஆலோசனை செய்யலாயிற்று. அத்துடன், அது 1917-ம் வருஷம் ஜூன் மாதத்தில் ஐரிஷ் கைதிகளை யெல்லாம் விடுதலை செய்துவிட்டது. இவர்களை யெல்லாம் ஐரிஷ் மக்கள் பெருமகிழ்ச்சியோடு வரவேற்றனர். டிவேலராவுக்கு அவர்கள் அளித்த பெரிய வரவேற்பையும் உபசாரத்தையும் சொல்லி முடியாது. 18-6-1917-ந் தேதி அவர் டப்ளின் நகருக்குப் போய்ச் சேர்ந்தபோது, பொதுமக்கள் பெருந் திரளாகக் கூடி மரியாதை செய்தனர். தங்களுக்குத் தலைவராக இருக்கக்கூடியவரும், நாட்டுக்கும் தங்களுக்கும் சுதந்திரம் தரக் கூடியவரும் டிவேலராவே என ஐரிஷ் மக்களனைவரும் கருதினர் என்றால் மிகையாகாது. ஐரிஷின் பிரபல அரசியல் ஸ்தாபனங்களான குடியரசுக் கட்சியும் ஸின்பீன் சங்கமும் டிவேலராவையே தங்கள் தலைவராகக் கொண்டன வென்றால் அதிகஞ் சொல்வானேன்!

## 3. ஜகப்பிரசித்தியும் தலைமைப் பதவியும்

டிவேலரா சிறையிலிருந்து விடுதலையான சில நாட்களுக்கெல்லாம், தேசியக் கட்சியைச் சேர்ந்த வில்லி என்பார் மரணமடைந்ததன் பயனாக, காமன்ஸ் சபையில் காலியான ஒரு ஸ்தானத்துக்குத் தேர்தல் நடந்தது. குடியரசுக் கட்சியினரும், பொது மக்களும் டிவேலராவை அபேட்சகராக நிறுத்த விரும்பினர். டிவேலரா முதலில் இதற்கு இணங்கவில்லை; ஆயினும் பின்னர், பெரும்பாலார் வற்புறுத்துதலின்மீது, 'ஐரிஷ் மக்கள் அன்னியர் ஆட்சியை விரும்பவில்லை என்பதைப் பிரிட்டிஷ் சர்க்காருக்குத் தெரிவிக்கவும், தேசியக் கட்சி எனச் சொல்லிக்கொள்ளும் ஒரு பிற்போக்கு கட்சிக்கு நாட்டில் செல்வாக்கில்லை என்பதை நிலைநாட்டவும்

வேண்டுமானுல் நான் உங்கள் விருப்பப்படி தேர்தலில் நிற்கி றேன். ஆனுல், இதில் வெற்றி ஏற்பட்டால், காமன்ஸ் சபையில் போய் அமரமாட்டேன். இது உங்களுக்குச் சம்மதமா ?' என்று நிபந்தனை போட்டு, அதை நண்பர்கள் ஏற்றுக்கொண்ட பிறகே தேர்தலில் நின்று போட்டி போட் டார். இவரை எதிர்த்து நின்ற தேசியக் கட்சி யபேட்ச கரோ செல்வமும் செல்வாக்கும் வாய்ந்தவர். பிரிட்டிஷ் சர்க்காரின் பேராதரவு பெற்றவர். இத்துணை தகுதிகளும் பொருந்திய தேசியக் கட்சி யபேட்சகர், டிவேலராவுக்குக் குடியரசுப் படையினரும், பொதுமக்களும் கட்டுப்பாடாக நின்று பாடுபட்டதன் பயனுக, படுதோல்வி யடைந்தார். ஏற்கனவே, தம் சகோதரர் வில்லியின் பிரிவை யாற்றுமல் மனவேதனை யடைந்திருந்த தேசியக் கட்சித் தலைவர் ரெட் மாண்டு இத் தோல்வி கண்டு ஏக்க முற்றுர். டிவேலராவின் வெற்றியைத் தேசத்தின் வெற்றியாக ஐரிஷ் மக்கள் கொண் டாடினர். இவ்வெற்றிக் களியில் டிவேலரா மதிமயங்கிப் போய்விடவில்லை. இச்சமயத்திலும் அவர் தமது இயற்கை யான அடக்கத்துடனேயே இருந்து, மேல் நடக்கவேண்டிய காரியங்களைக் கவனித்துவந்தார்.

டிவேலரா வெற்றிக்குப் பின், குடியரசுக் கட்சிக்கு ஐரிஷ் மக்களிடையே மகத்தான செல்வாக்கு ஏற்பட்டு விட்டது. குடியரசுக் கட்சியும், ஸின்பீன் சங்கமுமே நாட்டில் நிலவி வந்தன. தேசியக் கட்சியோ நாளடைவில் இருந்த இடந் தெரியாமல் போய்விட்டது. ஆர்தர் கிரிப்பித் என்னும் பேரறிஞரால் ஆரம்பித்து நடத்தப்பட்டு வந்த ஸின்பீன் சங்கம், அயர்லந்தின் போக போக்கியங்களை அந் நாட்டு மக்களே பரிபூரணமாக அநுபவிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு வேலை செய்துவந்தது. மற்றப்படி அதற்கு அரசியல் நோக்கம் முதலிய எதுவுங் கிடையாது. ஆதலால் அது நாட்டு மக்கள் கவனத்தைப் பெறவில்லை. குடியரசுக் கட்சிதான் அயர்லந்தின் சுதந்திரம் நாடித் தீவிரமாக வேலை செய்துவந்தது. ஆனுல், அவர்கள் இரகசியமாக வேலை செய்து வந்ததனுல், ஸின்பீன் சங்கத்தைப்போலவே, 1916-ம்

ஆண்டில் பகிரங்கமாக வந்து கலகஞ் செய்யும்வரை, நாட்டு மக்களுக்கு அக்கட்சியைப் பற்றி அறிந்துகொள்வதற்கு ஏதுவில்லாமற் போயிற்று.

குடியரசுக் கட்சித் தொண்டர் படையினர் திடீரென கிளம்பிக் கலகஞ் செய்த காலத்தில், 'பழியோரிடம் பண்ட மோரிடம்' என்பது போல், பிரிட்டிஷ் சர்க்கார் ஸின்பீன் சங்கத்தின் மீதே சந்தேகங் கொள்ளலாயினர். இச் சங்கத்தைச் சேர்ந்தவர்களே கலகத்துக்கு மூலகாரணமென்று சர்க்கார் கருதி அச்சங்கத் தலைவர் முதலியவர்களைக் கைதுசெய்து சிறையில் அடைத்தனர். குடியரசுக் கட்சியினர் இந்நிலைமையை வரவேற்றனர். மிதவாதிகளாயிருந்து வரும் ஸின்பீன் சங்கத்தினர் சர்க்கார் அடக்கு முறைக் கொடுமையை அநுபவித்தால் தான் தீவிரவாதிகளாக மாறித் தங்கள் கட்சிக்கு உதவியாயிருப்பர் என்பது அவர்கள் எண்ணம். அவர்கள் கருதியபடியே, கலகத்தின் எதிரொலியாகத் தாண்டவமாடிய அடக்குமுறை அமுலுக்குப் பின், ஸின்பீன் சங்கத்தினர் தீவிரவாதிகளாக மாறிக் குடியரசுக் கட்சியினரோடு சேர்ந்து வேலைசெய்து வந்தனர். ஆனால், ஆர்தர் கிரிப்பித்தும் ஸின்பீன் சங்கத்தினரும் குடியரசுக் கட்சியின் அடிப்படையான கொள்கையை மட்டும் ஏற்றுக் கொள்ளாமலே இருந்து வந்தனர்.

குடியரசுக் கட்சித் தொண்டர் படையினர் சர்க்கார் இறக்கங் கண்டு முன்னையினுந் துணிவுகொண்டு, ஆயுதபாணிகளாய் ஆர்ப்பாட்டத்தோடு நாடெங்கும் சென்று தங்கள் கட்சி நோக்கத்தையும் வேலைத்திட்டங்களையும் மக்களிடையே பரப்பி வந்தனர். இது சர்க்காருக்கு ஆத்திரத்தை யுண்டாக்கியது. ஸின்பீன் சங்கத்தின் முக்கியஸ்தர்கள் பலரைச் சிறைசெய்தனர். இதில் டிவேலராவின் அருமைத் தோழரான ஆஷ் என்பாரும் சிறையானார்.

இவ்விதங் கைது செய்யப்பட்டவர்களுக்குச் சிறைச்சாலையில் போதிய சௌகரியம் அளிக்கப்படாததால் கைதிகளில் ஒரு சிலர் உண்ணாவிரத மிருந்தனர். இவ்வுண்ணு

விரதத்துக்கு ஆஷ் என்பார் பலியானுர். இவரது அகால மரணம் நாட்டுமக்களிடையே ஒருவித பரபரப்பையும் ஆவே சத்தையும் உண்டுபண்ணியது. ஆஷின் பிரேத அடக்கத் தின்போது, குடியரசுக் கட்சித் தொண்டர் படையினர் ஆயுதபாணிகளாய் வந்து அதற்கு இராணுவ மரியாதை செய்து ஊர்வலமாக இடுகாட்டுக்குத் தூக்கிச் சென்றனர். அப்பிரேத அடக்க ஊர்வலத்திற்குக் கூடிய ஜனத்திரளேயும் அவர்களது ஆவேச உணர்ச்சியையுங் கண்டு சர்க்கார் அதி காரிகள் பயந்துபோய் விட்டனர். ஆனுல், நல்லகாலமாக அசம்பாவித மொன்றும் நிகழ்வில்லே.

ஸின்பீன் சங்கத்தின் மகா சபை டப்ளின் நகரில் 1918-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் நடை பெற்றது. இதுவரை அதற்குத் தலேவரைத் தேர்ந்தெடுக்கும் பிரச்சினே யே எழாது, ஆதித்தலேவர் ஆர்தர் கிரிப்பித் என்பவரே நிரந்தர தலேவராக இருந்த நிலே மாறி, அப்பழந் தலேவரை விட்டு இவ் வருஷம் காலதேச வர்த்தமானத்திற் கேற்ற தலேவரா யிருக் கும் டிவேலராவையே தலேவராகத் தேர்ந்தெடுக்க வேண்டு மென்று சங்க அங்கத்தினர்கள் பெரும்பாலார் கருதினர். இக்குறிப்பறிந்த கிரிப்பித் கௌரவமாகத் தாம் தலேமைப் பதவியை விட்டுக்கொடுத்து, மகாசபைக் கூட்டத்தில் டிவேல ராவைத் தாமே தலேவராகப் பிரரேபித்தார். எனவே, நமது டிவேலரா ஸின்பீன் சங்கத்துக்குப் போட்டியின்றித் தலேவ ரானுர். இதைப் பின்பற்றிக் குடியரசுக் கட்சித் தொண்டர் படையும் டிவேலராவைத் தலேவராக்கிக் கொண்டது. எனவே, டிவேலரா பொதுவாழ்வில் ஈடுபட்ட 18 மாதங் களில் அயர்லந்துக்கே—அயர்லந்தின் அரசியல் வட்டாரத் துக்கே ஏக தலேவரானுர் என்ருல் மிகையாகாது.

டிவேலரா தலேமையில் நடைபெற்ற ஸின்பீன் மகா சங்கக் கூட்டத்தில், காமன்ஸ் சபைக்காக நடக்கும் பொதுத் தேர்தல்களில் எல்லா ஸ்தானங்களுக்கும் தம் கட்சி சார்பில் அபேட்சகர்களே நிறுத்தி வெற்றிபெற முயலவேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டது. இதன்படி, பின்னர் நடந்த சில தேர்தல்களில் ஸின்பீன் சங்கத்தார் தங்கள் கட்சி

யபேட்சகர்களை நிறுத்தியும் வெற்றி காண முடியவில்லை. இதனால், பிரிட்டிஷ் சர்க்கார் ஸின்பீன் சங்கத்தைப்பற்றி அலட்சியமாகக் கருதத் தொடங்கிவிட்டது. எனவே, அவ் வரசாங்கம், யுத்தத்துக்கு ஆட்கள் தேவையா யிருந்ததால், அயர்லந்தில் கட்டாய இராணுவ சேவையை அமுலுக்குக் கொண்டுவந்து ஆள் திரட்ட தைரியமாக முயன்றது. இச் செயல் சர்க்கார் விஷயத்தில் பொதுமக்களுக்கு இருந்துவரும் கொஞ்சநஞ்சம் நல்லெண்ணத்தையும் போக்கிவிடும் என்று தேசியக் கட்சித்தலைவர் முதலியோர் எச்சரிக்கை செய்தும் பிரிட்டிஷ் அதிகாரிகள் பொருட்படுத்தவில்லை. தங்கள் அங்கீகாரம் பெற்று அயர்லந்தின் அரசியலை நிர்ணயிப்பதாக அளித்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றி வைக்காது காலப்போக்கு பண்ணி வருவது காரணமாக, ஏற்கனவே மனக்கொதிப்பு கொண்டிருக்கும் ஐரிஷ் மக்கள், கட்டாய இராணுவ சேவை முயற்சி கண்டு வீறுகொண்டு எழுந்தனர். கட்சிவேற்றுமை முதலிய பேதங்களைப் பெரிதாகக் கருதாது, ஐரிஷ் மக்க ளனைவரும் ஒன்று திரண்டனர். சர்க்காரின் விபரீதப் போக்கைக் கண்டிப்பதற்காக, டப்ளின் நகரில் சர்வ கட்சிகளும் கொண்ட மகாநாடொன்று டிவேலரா தலைமை யில் நடந்தது. அதில், கட்டாய இராணுவ சேவை அமுலை எவ்வெவ்வகையாக எதிர்க்கவேண்டு மென்பது பற்றி டிவே லரா எல்லா கட்சியினரும் ஏற்கத்தக்கவாறு திட்டமொன்று வகுத்துக் கொடுத்தார். அவரது ராஜதந்திரத்தையும் நுண் ணறிவையும் பேர்பெற்ற அரசியல் தலைவர்களெல்லாம் வெகு வாகப் பாராட்டினர். டிவேலராவுக்குச் சென்ற இடமெல் லாம் சிறப்பு ஏற்பட்டது. அவரது சிறந்த தலைமையால் ஸின்பீன் சங்கம் ஒப்பும் உயர்வுமில்லா ஒரு பெரும் ஸ்தா பனமாக விளங்கியது.

ஸின்பீன் சங்கத்தின் செல்வாக்கு பிரிட்டிஷ் சர்க்கா ரின் கண்களை உறுத்தியது. ஆகவே, மீண்டும் அடக்கு முறை பாணத்தை யேவி ஸின்பீன் சங்கத்தினர் 80 பேரைக் கைது செய்து சிறையில் வைத்தனர். சர்க்காரின் இவ்வேற் பாட்டை மைக்கேல் காலின்ஸ் என்பவர் தமது ஆட்கள்

வாயிலாக முன் கூட்டி யறிந்துகொண்டார். அவர் மகா மாயாவி என முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். ஆகவே, அவர் எந்தெந்த நாளில் யார் யார் கைது செய்யப்படு வார்கள் என்பதை அறிந்து அவர்களை யெல்லாம் ஜாக் கிரதையாக இருக்கும்படி எச்சரித்தார். சங்கத் தலைவர் டிவேலரா இன்ன தேதியில் கைது செய்யப்படுவார் என்று தெரிந்ததும், அன்று அவரைத் தம் இருப்பிடத் துக்குச் செல்லவேண்டாமென்று கேட்டுக்கொண்டார். அவ்விதமே செய்வதாகக் கூறிய டிவேலரா, பின்னர் என்ன காரணத்தாலோ தம் இல்லத்துக்குச் சென்றார். உடனே அதிகாரிகள் அவரை 18-5-1918-ந் தேதி யன்று கைது செய்து, இங்கிலாந்துக்குக் கொண்டு சென்று ஒரு சிறைச்சாலையில் வைத்தனர். ஸின்பீன் சங்கம் மறைந்து போகாது பலப்பட்டு வருவதையும், தங்கள் முயற்சிக்கு எதிர்ப்பு இருந்து வருவதையும் கண்ட பிரிட்டிஷ் சர்க்கார் கட்டாய இராணுவ சேவை விஷயத்தைக் கை நழுவ விட்ட னர். இவ்வெற்றியைப் பயன்படுத்திக்கொண்டு காலின்ஸ் ஸின்பீன் சங்கத்தை இன்னும் பலப்படுத்தி வந்தார்.

1918-ம் ஆண்டில் ஐரோப்பிய மகா யுத்தம் நின்று சமாதானம் ஏற்பட்டதல்லவா! இச்சமயத்தில் ஐரிஷ் கைதி கள் விடுதலை செய்யப்படுவர் என்று எதிர்பார்க்கப்பட்டது. பிரிட்டிஷ் சர்க்காரும் அவ்விதஞ் செய்திருக்கக் கூடும். ஆனால், அதே வருஷம் டிசம்பர் மாதத்தில் காமன்ஸ் சபைக்கு நடந்த பொதுத் தேர்தலில் ஸின்பீன் சங்கத்துக் குக் கிடைத்த வெற்றியும், அதன் பயனாக அவர்கள் செய்த முடிவும் இந்நிலைமையை மாற்றி விட்டதென்று கூறவேண் டும். மேற்குறித்த பொதுத் தேர்தலில் மைக்கேல் காலின்ஸ் எல்லா ஸ்தானங்களுக்கும், முக்கியமாகச் சிறையிலிருந்த தலைவர்களையும், மற்றும் சங்க மெம்பர்களையும் அபேட்சகர்க ளாக நிறுத்திவைத்து தீவிரமாக வேலைசெய்தார். ஐரிஷ் இளைஞர்களும் தொழிற்கட்சியார், முதலாளி வர்க்கத்தார் முதலியவர்களும் இவரது முயற்சிக்கு ஆதரவா யிருந்தனர். முடிவில், 100 ஸ்தானங்களில் ஸின்பீன் சங்கத்தினர் 76

ஸ்தானங்களைப் பெற்றனர். இதில் தேசியக் கட்சித்தலைவர் டில்லன் முதலியவர்களுக்குப் படுதோல்வி யேற்பட்டது. தேர்தல் காலத்தில் டிவேலரா பெயர் எங்கணும் முழங்கியது. ஐரிஷ் மக்கள் உணர்ச்சி கொண்டு, ஸின்பீன் சங்க அபேட்சகர்களையே ஆதரித்தனர்.

தேர்தல் முடிவு தெரிந்ததும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஸின்பீன் சங்க அங்கத்தினர்கள் (சிறையிலிருப்பவர்கள் தவிர) டப்ளின் நகரில் ஒன்றுகூடி, எதிர்காலத்தில் எவ்விதம் நடந்து கொள்வது என்பதைப்பற்றித் தீவிரமாக யோசித்து, முடிவில், டிவேலரா ஏற்கனவே நடத்திக் காட்டியபடி நடப்பதென்று தீர்மானித்தனர். அதாவது, தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் லண்டன் காமன்ஸ் சபைக்குப் போய் ஸ்தானம் வகிப்பதில்லை என்பதாம். இம்முடிவுக்கு வந்த மெம்பர்கள் டப்ளின் நகரிலேயே ஒரு போட்டி பார்லிமெண்டை ஏற்படுத்திச் சுயாட்சி நடத்த எண்ணி அதற்கான காரியங்களைக் கவனிக்கலாயினர்.

## 4. தப்பிவந்த கைதிக்கு அமெரிக்கா வரவேற்பு

இத்தருணத்தில் நமது டிவேலரா சிறையில் அடைபட்டுக் கிடந்தாலும், நாட்டில் நடக்கும் மேற்படி நிகழ்ச்சிகளெல்லாம் மைக்கேல் காலின்ஸ் வாயிலாக அவருக்கு எட்டிக்கொண்டிருந்தன. எனவே அவருக்குச் சிறையில் இருக்க இருப்பு கொள்ளவில்லை. கூண்டில் அடைபட்ட சிங்கம் போல் அவர் அச்சமயங் காணப்பட்டார். நீண்ட நாள் சிந்தனைக்குப் பின்னர், அவர் எப்படியாயினுஞ் சிறையிலிருந்து வெளியேறிவிட வேண்டுமென்ற தீர்மானத்துக்கு வந்தார். ஆமாம்; பலத்த காவல்களுள்ள சிறைச்சாலையிலிருந்து எப்படித் தப்பிச் செல்வது? தமது முடிவை இந்திரஜித்தனை மைக்கேல் காலின்ஸுக்குத் தெரிவித்தால் ஒரு வழி பிறக்கும் என்று நம்பி, அவர் இச் செய்தியை எட்ட வைத்தார். இங்கிலாந்தின் ஒரு கோடியில் உள்ள லிங்கன் என்னுஞ் சிறைச்சாலையில் டிவேலரா இருந்து வந்தார். அது மிகவும் பந்தோபஸ்தான இடமென்று சிறையதி

காரிகள் கருதியிருந்தாலும், கைதிகள் தப்பிச் செல்லவேண்டுமென்று முயன்ருல் சாத்தியப்படத்தக்க விதமாக அதன் அமைப்பு இருந்தது. சிறைச்சாலைக்குப் பின்புறம் நிர்மானுஷ்யமான வனந்திரம்; ஆதலால், கைதிகள் உடற்பயிற்சி செய்வதற்காகப் பின்புறத்துக்குச் செல்லும்போது, தந்திரமாகப் பின்புற வாயிலைத் திறந்து வெளியேறி விட்டால் சிறையதிகாரிகள் கண்ணில் படாமல் தப்பி யோடி விடலாம். இந்நிலைமையை யெல்லாம் டிவேலராவும் அவரது சகாக் கைதிகளும் கலந்து ஆலோசனை செய்து வெளியேறுவதற்கான வழியைக் கண்டனர். பொதுவாகவே, டிவேலராவிடம் சிறையதிகாரிகளுக்கும் கைதிகளின் உபதேசகரான பாதிரியார் முதலியவர்களுக்கும் நன்மதிப்பும் நம்பிக்கையு முண்டு; ஆதலால், அவர் சிறைச்சாலைக்குள் எங்கு வேண்டுமானுலும் தாராளமாய்ப் போய் வருவார். ஆகவே, சிறைவாயில்களின் சாவிகள் இருக்குமிடம் அவருக்குத் தெரிந்திருந்தது. எனவே, அவர் சாவி இருக்குமிடத்துக்கு 'யாரும் சந்தேகிக்காதவாறு சென்று மெழுகுவர்த்தியினுல் அச்சாவியைப் போல் செய்துகொண்டு வந்தார். அதைக்கொண்டு சாவி உருவத்தையும் சில குறிப்புக்களையும் ஒரு காகிதத்திலெழுதி ஒரு கைதி வரைந்த கடிதத்துடன் வைத்து அனுப்பச் செய்தார். ஆனுல், அக்கடிதத்தைப் பெற்ற நண்பன் இவ்விஷயம் சர்க்காருக்குத் தெரிந்தால் தனக்கு ஆபத்தாய் முடியுமென்று பயந்து எல்லாவற்றையும் கிழித்து போட்டுவிட்டதால் எதிர்பார்த்த பலன் ஏற்படாது போய் விட்டது. மைக்கேல் காலின்ஸ் வந்து கேட்கையில், அம்மனிதன் தனக்கு எவ்விதமான கடிதமும் கிடைக்கவில்லை என்று ஒரேயடியாகச் சாதித்து விட்டான். கிணற்றில் கல்லைப் போட்டது போல், தாம் அனுப்பிய கடிதத்துக்கு எவ்விதத் தகவலுங் கிடைக்காதிருப்பதைக் கண்ட டிவேலரா மீண்டும் ஒரு கடிதமெழுதி வேருெரு நண்பனுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தார். அதைப் பெற்ற தோழன் சிறிதுந் தாமதியாது எடுத்துச் சென்று காலின்ஸிடம் சேர்த்தான். எனவே, அவர் இதற்குத் தக்க ஏற்பாடுகளை ஜரூராகச் செய்யலானுர். போலண்டு என்பவர் சாவி

தயாரித்துவிட்டார். அதை ஒரு கைதியின் மனைவி தயாரித்த கிறிஸ்மஸ் கேக்கினுள் வைத்து அனுப்பப்பட்டது. டிவேலரா வின் நல்ல காலம் அச்சமயம் கிறிஸ்மஸ் வாரமாயிருந்தது. ஆதலால் தான், கைதிகள் கடிதமெழுதி யனுப்பவும், வெளியி லிருந்து பட்சணங்கள் சிறைக்கு வரவும் சிறையதிகாரி கள் அநுமதித்திருந்தனர். இவ்விதம் காலின்ஸ் அனுப்பிய சாவி டிவேலராவுக்குக் கிடைத்ததாயினும் துரதிர்ஷ்டவசமாக அது பூட்டுக்குச் சரியாக இல்லை. ஆகவே, மீண்டும் காலின் ஸின் உதவியை நாட வேண்டியதாயிற்று. அவரும் வேறு சாவி தயாரித்து முன்போலவே அனுப்பினர். அதுவுஞ் சரியாயில்லை. மூன்றாவதாக வரவழைக்கப்பட்ட சாவிதான் முடிவாகப் பயன்பட்டது.

இவ்விதம் டிவேலரா தப்ப முயற்சி நடந்துகொண்டிருந்த சமயத்தில், வேறு சிறையிலிருந்து, ஐரிஷ் கைதிகள் சிலர் தப்பியோடிவிட்டனர். இச்செய்தி இங்கிலாந்தில் சிறிது பர பரப்பை யுண்டுபண்ணியது. டிவேலராவைச் சிறையிலிருந்து வெளியேற்றிச் செல்ல இங்கிலாந்து வந்துகொண்டிருந்த மைக்கேல் காலின்ஸ், இச்சம்பவத்தால் எங்கு தங்கள் காரியங் கெட்டு விடுமோ என அஞ்சினர். ஆனல், லிங்கன் சிறையதி காரிகள் இச்சம்பவத்தைப் பற்றிச் செவியுற்றும் அலட்சியமா யிருப்பதைக் கண்டு அவருக்குச் சிறிது தைரியம் பிறந்தது. அவர் குறிப்பிட்டிருந்த 3-2-1919-ந் தேதியன்று மைக்கேல் போலண்டு என்பாருடன் மாறுவேஷந் தரித்து காரில் சென்று மாலை யிருட்டில் சிறையை யடைந்து தாங்கள் வந் திருப்பதை அறிவிக்க டார்ச் லைட்டைச் சைகை காட்டினர். வெளியேறத் தயாராக இருந்த டிவேலராவும் மறு சங்கேதங் காட்டித் தம்மிடமிருந்த சாவியைக்கொண்டு சிறையின் பின் புறக் கதவைத் திறந்தார். அதற்கப்பாலும் ஒரு கதவு இருப்ப தைக் கண்டு அவர் திகைத்தார். மதியூகியான காலின்ஸ் தம் மிடமிருந்த ஒரு சாவியால் உள் பக்கமாகக் கையை நுழை த்து அதைத் திறக்க முயன்றார். ஆனல், அச்சாவி ஒடிந்து போயிற்று. இதைக் கண்ட காலின்ஸுக்கு எப்படியிருக் கும்? இதற்குள் டிவேலரா தாம் வைத்திருந்த சாவியால்

அதைத் தள்ளவே கதவு திறந்து கொண்டது. இதைக் கண்டு அவர்கள் அடைந்த மகிழ்ச்சியை விவரிக்க முடியாது. அடுத்த கணம் அவர்கள் துரிதமாக அவ்விடத்தைவிட்டு நீங்கி வயல்களைக் கடந்து பாதையில் இருந்த மோட்டாரில் ஏறி மான்செஸ்டர் நகர் சேர்ந்தனர். மைகேல் அங்கு ஒரு பாதிரி வீட்டில் டிவேலராவை அடைக்கலப்படுத்தி விட்டு நேரே லிவர்ப்பூல் நகர் சென்று இரகசியப் போலீஸார் கண்களில் படாது அங்கிருந்து கப்பலேறி அயர்லந்து சென்றார்.

டிவேலரா சிறையிலிருந்து தப்பியோடிவிட்ட செய்தி இங்கிலாந்தில் ஒரு பெரிய பரபரப்பை யுண்டு பண்ணியது. அயர்லந்திலோ இது அளவிலா ஆனந்தத்தைத் தந்தது. இச் சமயம் அரசாங்க அதிகாரிகளும் இரகசியப் போலீஸாரும் மிக விழிப்பாக இருந்தார்களாதலால், டிவேலரா 22-நாட்கள் வரை மான்செஸ்டர் நகரிலேயே தலை மறைந்திருந்தார். பின்னர், அவர் அவ்விடத்திலிருந்து அப்படியே அமெரிக்கா செல்லவேண்டு மென்று எண்ணினர். ஆனால் அச்சமயம் அயர்லந்து மிகக் குழப்பமான நிலையிலிருந்ததால், அங்கு செல்லவேண்டியது அவசியமாயிற்று. அவருக்கு ஆடம்பரமான வரவேற்பு அளிக்க ஐரிஷ் மக்கள் ஏற்பாடு செய்தனர். இவர்களின் உணர்ச்சியைக் கண்டு ஆங்கில அதிகாரிகள் ஐரிஷ் கைதிகளை யெல்லாம் விடுதலை செய்தனராயினும், டிவேலராவுக்கு அளிக்கவிருக்கும் வரவேற்பைத் தடுக்கக் கருதினர். இதையறிந்த டிவேலரா தமக்கு வரவேற்பு ஒன்றும் வேண்டாம் எனக் கூறித் தடுத்துவிட்டார்.

டிவேலரா நேராக ஸின்பீன் பிரதிநிதி சபையின் இரகசியக் கூட்டத்துக்குச் சென்றார். தக்க சமயத்தில் இவர் வந்ததைக் கண்டு சபையார் மகிழ்ச்சி கொண்டவர்களாய், அவரது சிறந்த யோசனையையே பெரிதும் அநுசரித்து ஐரிஷ் அரசியலை வகுத்தனர். அதன்படி மந்திரி சபையொன்று ஏற்படுத்தப்பட்டது. டிவேலராவைப் பிரதிநிதி சபைத் தலைவராகவும், மந்திரி சபைத் தலைவராகவும் தேர்ந்தெடுத்தனர். இவ்விதம் ஏற்பட்ட ஐரிஷ் பிரதிநிதி சபை 10-4-1919-ந் தேதியில் பகிரங்கமாகக் கூடியது. தலைவர் டிவேலரா தேசத்தின்

லட்சியத்தைத் தெரிவிக்கும் முறையில் சிறந்த பிரசங்க மொன்று புரிந்தார். பின்னர், அவர் அதில் போராட்டம் பற்றிய தீர்மானமொன்றைப் பிரேரித்துப் பேசி நிறைவேறச் செய்தார்.

அதன் பின்னர், டிவேலரா வார்ஸேல் நகரில் கூடும் சமாதான மகாநாட்டின் முன் சமர்ப்பிப்பதற்காக, ஐரிஷ் குடியரசுக் கட்சியின் அபிப்பிராயத்தை விளக்கமாக விவரித்து ஒரு அறிக்கை தயாரித்து அனுப்பினர். பிரிட்டன் உட்பட பிற தேசங்களால் பெரிதும் மதிக்கப்படும் அமெரிக்காவின் உதவியை நாடி எப்படியாயினும் ஐரிஷ் சுதந்திரத்தைப் பெற வேண்டுமென்பதிலேயே டிவேலராவின் கவனம் பதிந்திருந்ததால், இக் காரியங்க ளெல்லாம் முடிந்தவுடன் அவர் அமெரிக்கா புறப்படலானர். அயர்லந்தில் தீவிரமான போராட்டம் நடைபெற இருக்கும் இச்சமயத்தில் தங்கள் தலைவர் அமெரிக்கா செல்வதை எவரும் விரும்பவில்லை. ஆனால் டிவேலராவின் தீர்மானத்தை மாற்றமுடியாது என்று அறிந்து பேசாதிருந்தனர்.

டிவேலரா அமெரிக்கா சென்ற கதை வெகு அதிசயமானது. கப்பலில் பிரயாணஞ் செய்வதற்குரிய அநுமதிச் சீட்டின்றி, ஆங்கில அரசாங்க அதிகாரிகள் கண்ணில் பொடி தூவி விட்டு அவர் செல்ல வேண்டியிருந்ததால் எவ்வளவு சிரமப்பட்டிருக்க வேண்டும் எனபதைக் கவனிக்கவேண்டும். மாய மனிதரான மைக்கேல் காலின்ஸ் மிகக் கஷ்டமான இக் காரியத்தை வெகு எளிதாக்கிவிட்டார். டிவேலரா செல்லு முன் ஒருவரை அமெரிக்கா அனுப்பி ஆடம்பரமான வரவேற்புக்கு ஏற்பாடு செய்தால்தான் உத்தேசித்துப் போகுங் காரியம் எளிதில் முடியும் என்று எண்ணிய அவர் போலண்டு என்பாரை அமெரிக்கரைப் போல புனைபெயரும் மாறு வேஷமும் போட்டுக் கொள்ளச் செய்து அமெரிக்காவுக்குச் செல்லும் ஒரு கப்பலில் கரி தள்ளும் வேலைக்காரனுக்கி அனுப்பினர். பின் அவர் அடுத்துச் செல்லும் கப்பலில் இரு ஐரிஷ்காரரை மாலுமிகளாக அமர்த்தி டிவேலராவுக்கு உதவியாக இருக்கும்படி செய்துவிட்டு, லிவர்ப்பூல் நகருக்குப்

போய் மாலுமி வேடத்தொடு டிவேலராவையும் ஏறச்செய்தார். நல்ல காலமாக டிவேலராவுக்குக் கப்பலில் இடையே எவ்வித இடையூறும் ஏற்படவில்லை. கடைசியாக, அவர் 1919-ம் வருஷம் ஜூன் மாத மத்தியில் அமெரிக்காவை யடைந்தார்.

டிவேலராவின் வீர தீரச் செயல்களை ஏற்கனவே அறிந்திருந்த அமெரிக்கர் அவருக்குப் பிரமாதமான வரவேற்பளித்தனர். பத்திரிகைகளெல்லாம் அவரது வருகையைப் பற்றிப் பாராட்டி எழுதின. டிவேலரா அமெரிக்காவின் ஜனப்பிரதிநிதி சபையில் உள்ள பிரபல அங்கத்தினர்கள் பலரைக் கண்டு ஐரிஷ் நிலைமையை எடுத்துக் கூறினர். மேலும், அவர் குடியரசின் பெயரால் நிதி திரட்ட வகுத்த கடனுக்கு அமெரிக்கர் பெரும்பாலார் பணங் கொடுத்து உதவினர். ஏற்கனவே, ஐரிஷ் பிரதிநிதி சபையால் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டிருந்த ஸ்தானீகரும் போலண்டும் டிவேலராவுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து தரலாயினர். டிவேலரா 6 மாதங்களுக்கெல்லாம் 50 லட்சம் டாலர்கள் திரட்டிவிட்டார். அவர், அமெரிக்கருக்கு நன்றியறிதல் கூறிவிட்டு ஒரு வருஷம் வரை அங்கிருந்து 1921-ம் வருஷ ஆரம்பத்தில் இரகசியமாக அயர்லந்தை யடைந்தார். இதனிடையே ஐரிஷ் அமெரிக்கர் மூவர் வார்ஸேல் சமாதான மகாநாட்டுக்குச் சென்று ஐரிஷ் கட்சியை எடுத்துரைக்க முயன்றனர். தலைவர் வில்ஸன் அவர்களுக்கு அநுமதி தரவில்லையாயினும், மகா நாட்டுக்கு வந்திருந்த பல தேசப் பிரதிநிதிகளிடமும் ஐரிஷ் கட்சியைத் தெரிவித்து அவர்களுக்கு அதன் விஷயத்தில் அநுதாபம் ஏற்படச் செய்தனர்.

## 5. சுதந்திர அயர்லந்தின் முடி சூடா மன்னன்

இதனிடையே, அயர்லந்தில் நடந்து வந்த கலகமும் குழப்பமும் அதை நிரந்தரமான அமர்க்களமாக்கி விட்டது. தேர்தலில் ஸின்பீன் கட்சியினர் ஐரிஷில் உள்ள ஸ்தல ஸ்தாபனங்களை யெல்லாங் கைப்பற்றி நிர்வாகத்தை நடத்தி

வந்தனர். எனவே அதிகார வர்க்கத்தினர் அடக்கு முறையைக் கையாண்டு ஸின்பீன் கட்சியினரையும் குடியரசுக் கட்சி முதலியவைகளையும் நசுக்கிவிட முயன்றது. இதன் பயனாக, அரசாங்கப் படைக்கும் எதிர் கட்சிப் படைகளுக்குஞ் சதா போர் நடந்துகொண்டிருந்தன. இத்தருணத்தில்தான் டிவேலரா தாய் நாடு வந்தார். உடனே போலீஸார் அவரைக் கைது செய்தனர். ஆனால், மேலதிகாரிகள் உடனே டிவேலராவை விடுவிக்கச் செய்தனர். இவ்விதம் பலமுறை அவரைச் சிறை செய்வதும் விடுவிப்பதுமாயிருந்தது. ஐரிஷ் குடியரசுப் படையின் வேலை இங்கிலாந்திலும் தலைகாட்டவே, பிரிட்டிஷ் மந்திரிகள் விஷயம் வெகுதூரம் முற்றிப்போய் விட்டதென்று நன்கு உணர்ந்து, ஐரிஷ் தலைவர்களோடு சமாதானஞ் செய்து கொள்ள முயன்றனர். ஜெனரல் ஸ்மட்ஸ் போன்றவர்களை டிவேலராவிடந் தூதனுப்பி அவரது மன நிலையை யறிய முயன்றனர். பிரிட்டிஷ் சர்க்காரே நேரில் ஈடுபட்டால்தான் சமாதானப் பேச்சு பேசமுடியும் என்று அவர் கண்டிப்பாகத் தெரிவித்து விட்டார். இதனிடையே, ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் அல்ஸ்டர் மாகாணத்துக்குச் சுயாட்சி ஏற்படுத்துவதற்குரிய சட்டசபை ஆரம்ப விழாவை நடத்திவைக்க அயர்லந்து வந்தார். அவர் சட்டசபைத் திறப்பு விழாவில் பேசுகையில், 'அயர்லந்து மக்கள் சென்றதை யெல்லாம் மறந்து எதிர்கால நன்மைக்கான வழியை நாட வேண்டும்' என்று வெகு உருக்கமாகப் பேசினார். இதை யொட்டி, பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜும் 24-6-1921-ந் தேதி டிவேலராவுக்கு ஒரு கடிதமெழுதி விடுத்தார். சிறையிலிருக்கும் ஐரிஷ் தலைவர்களுடன் சமரசஞ் சம்பந்தமாகக் கலந்தாலோசிக்க வேண்டுமென்று டிவேலரா தெரிவித்தார். ஆகவே, ஆர்தர் கிரிப்பித் முதலியோர் விடுதலை செய்யப்பட்டனர். மைக்கேல் காலின்ஸ் சிறைப் படாமலே தலை மறைந்திருந்ததால் டிவேலரா அவரைச் சந்தித்துப் பேச முடியவில்லை. மற்றவர்களுடன் உரையாடி விட்டு, டிவேலரா இங்கிலாந்து சென்று லாயிட் ஜார்ஜுடன் கலந்து பேசினார். இச் சந்திப்பின் பயனாக, ஐரிஷில் தாண்டமாடிக்கொண்டிருந்த அடக்குமுறை நின்

றது. சிறையிலிருந்த அரசியல் கைதிகளெல்லாம் விடுதலையாயினர். இதை யடுத்து ஐரிஷ் பிரதிநிதிசபை கூடிய போது, டிவேலராவே மீண்டுந் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் ஆர்தர் கிரிப்பித், காலின்ஸ், புருகா, காஸ்கிரேவ், ஸ்டாக், பார்டன் ஆகியோரை மந்திரிகளாக ஏற்படுத்தினர்.

அதன்பின், மீண்டும் லாயிட் ஜார்ஜ் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழிருந்து சுயாட்சி பெறுவதற்கான திட்டத்தை வகுப்பதற்குப் பிரதிநிதிகளை யனுப்புமாறு டிவேலராவுக்குக் கடிதமெழுதினர். குடியரசான அயர்லந்துக்கும் பிரிட்டனுக்கும் இடையில் சமரச ஒப்பந்தம் ஏற்பட முயற்சி செய்வதாயின், தம் தேசப் பிரதிநிதிகளை அனுப்ப முடியும் என்று டிவேலரா கண்டிப்பாகப் பதிலளித்தார். இது சம்பந்தமாகக் கடிதப் போக்குவரத்தும் நீண்ட நாட்கள் நிகழ்ந்தன. கடைசியாக, ஏமன் மந்திரி சபையிலிருந்து ஐவரை மைக்கேல் காலின்ஸ் தலைமையில் அனுப்பினர். ராஜ தந்திரத்தில் பேர்போன பிரிட்டிஷ் பிரதிநிதிகளும் தேச பக்தியில் தலைசிறந்த ஐரிஷ் பிரதிநிதிகளும் கூடி உரையாடியதன் பயனாக, ஒரு சமரசம் ஏற்பட்டு, ஒப்பந்தத்தில் 5-12-1921-ந் தேதி இரு தேசப் பிரதிநிதிகளும் கையெழுத்திட்டனர்.

இவ் வொப்பந்தத்தின்படி, அயர்லந்தில் சுயாட்சி ஏற்பட்டது ; ஆயினும், ஒப்பந்தத்தில் விதிக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் அரசருக்கு ராஜ விசுவாசப் பிரமாணஞ் செய்தல், கவர்னர் ஜெனரல் நியமித்தல் முதலிய நிபந்தனைகள் இச் சுயாட்சியைப் பாதிக்கக்கூடியனவாக இருப்பதாக டிவேலரா அபிப்பிராயப்பட்டார். தமது பிரதிநிதிகள் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளால் ஏமாற்றப் பட்டதாக எண்ணினர். ஆகவே, அவர், ஒப்பந்தத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யலானர். காலின்ஸ் முதலியோருக்கு இது மன வருத்தத்தை யளித்தது. தாங்கள் சாதித்துவந்த காரியத்தைக் கேவலப்படுத்தித் தங்களை அவமானப்படுத்த டிவேலரா முயல்வதாக அவர்கள் கருதினர். ஆகவே, மந்திரி சபையில் பிளவேற்பட்டது

ஐரிஷ் பிரதிநிதி சபையில் ஒப்பந்தஞ் சம்பந்தமாகப் பலத்த வாதம் நடந்தது. டிவேலராவின் கட்சியை புருகா, ஸ்டாக் முதலியோர் ஆதரித்து நின்றாலும், ஆர்தர் கிரிப்பித், மைக்கேல் காலின்ஸ் ஆகியோர் பக்கமே வெற்றி யேற்பட்டது. வின்பின் கட்சியின் நிர்வாக சபையிலும் இப்பிரச்சினையைக் கிளப்பி, டிவேலரா தலைமைப் பதவியை ராஜிநாமா செய்தார். ஆகவே, ஆர்தர் கிரிப்பித்தே பழையபடி தலைவராகித் தேச நிர்வாகத்தைக் கவனித்து வந்தார். டிவேலரா ஐரிஷ் பிரதிநிதி சபையில் பரிபூரண சுதந்திரமே லட்சியம் என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தார். அது சபையின் அங்கீகாரத்தைப் பெருததால், அவரும், அவரது தோழர்களும், சபை அங்கத்தினர் பதவிகளை ராஜிநாமா செய்து வெளியேறினர். இவ்வித நிகழ்ச்சிகளால், குடியரசுக் கட்சித் தொண்டர் படை முதல் பொதுமக்கள் வரை எல்லா இடத்திலும் கட்சி பிரதி கட்சிகள் ஏற்பட்டன. நாளடைவில், தேச நிர்வாகத்தை நடத்துங் கட்சிக்கும் டிவேலரா கட்சிக்கும் கைகலந்த சண்டை யேற்பட்டது. இந்நிலைமை தேச மக்களுக்குப் பெரு வருத்தத்தை யளித்தது. தேசநலம் விழைவோர் சிலர் இரு கட்சியினர்க்கும் சமரசத்தை யுண்டுபண்ண முயன்றனர். அதன் பயனாக, ஒப்பந்தத்தை வியாஜமாக வைத்து இரு கட்சியர்ரும் தேர்தலில் நிற்பதென முடிவாயிற்று. இதிலும், கிரிப்பித் கட்சிக்கே பெரு வெற்றி யேற்பட்டது. இதைக் கண்ட டிவேலரா மனமுடைந்து, ஐரிஷ் பிரதிநிதி சபையில் ஸ்தானம் வகிக்காது விலகிக்கொண்டார். அவரைப் பின்பற்றி அவரது தோழர்களும் வெளியேறினர்.

இதன்பின், இரு கட்சியாருக்கும் விரோதம் பலப்பட்டது. இதன் எதிரொலியாக, கலகமும் போரும் அடிக்கடி நடந்தன. குடியரசுக் கட்சியார், பிரிட்டிஷ் சர்க்கார் மீது போர் புரிய விரும்பி, ஸர் ஹென்றி வில்ஸன் என்னுஞ் சேனைத் தலைவரொருவரை லண்டனில் சுட்டுக் கொன்றனர். ஐரிஷ் அரசின் சேனைத் தலைவரைச் சிறை பிடித்துச் சென்றனர். போர் முற்றியதால், டிவேலராவின் கட்சியைச் சேர்ந்த புருகா, போலண்டு முதலியவர்களும், கிரிப்பித் கட்சியில்

காலின்ஸ் முதலியவர்களும் உயிரிழந்தனர். இத்துரதிர்ஷ்ட நிலையைக் கண்டு கிரிப்பித் மனமுடைந்து மாண்டார். அவரது ஸ்தானத்தில் காஸ்கிரேவ் அமர்ந்தார்.

இப்போது டிவேலராவுக்கு ஐரிஷ் மக்களிடையே முன்னையினும் அதிக செல்வாக்கு ஏற்பட்டது. காஸ்கிரேவ் குடியரசுக் கட்சியை அடக்க பலமான அடக்கு முறையைக் கையாண்டார். இதன் பயனாக இரு கட்சியிலும் பெரும் பாலோர் உயிரிழக்க நேர்ந்ததே யொழிய, வேறு பலன் ஏற்படவில்லை. டிவேலராவின் உயிர்த் தோழர்களான லிஞ்சு முதலியோர் சர்க்கார் அடக்கு முறைக்குப் பலியானது கண்டு அவர் மிகவும் மனம் நொந்தார். ஆகவே, அவர் ஐரிஷ் சுதந்திரத்துக்குப் பரம வைரிகளாக இருப்பவர்களை எதிர்க்கும் விஷயத்தில் தம் கட்சியார் சர்க்காருடன் சேரக் கூடுமென்றும், சர்க்காரும் தங்கள் நோக்கத்துக்கு இணங்குவதா யிருந்தால், தம் கட்சியா ரனைவரும் மனப் பூர்வமாக ஒத்துழைக்கத் தயாரா யிருப்பதாகவும் ஒரு அறிக்கை வெளியிட்டார். காஸ்கிரேவ் அடுத்துவரும் தேர்தலில் டிவேலரா தம் கொள்கையை விளக்கிக் கூறிக் குடியரசுக் கட்சியினரை அபேட்சகராக நிறுத்திவைத்து தீவிரமாக வேலை செய்யலா மென்றும், தேர்தல் காலத்தில் இக் கட்சியாருக்குச் சர்க்கார் எவ்வித இடையூறும் விளைவிப்பதில்லை யென்றும் உறுதி கூறினர். இவரது வார்த்தை அவ்வளவும் உண்மை யெனக் கருதிய டிவேலரா வெளிவந்து தேர்தலுக்குத் தம் கட்சியினரை ஆயத்தப்படுத்தினர். உடனே, காஸ்கிரேவ் அரசாங்கம் அவரைச் சிறை செய்ததோடு, அவரது கட்சியினரையும் கொடுமைப் படுத்தியது. இக்கபட நாடகத்தைக் கண்ட ஐரிஷ் மக்கள் சர்க்கார்மீது ஆத்திரங் கொண்டனர். காஸ்கிரேவ் தமக்குள்ள செல்வாக்கை இழந்தார். அவரது மந்திரி சபை நெருக்கடியைச் சமாளிக்க முடியாது தத்தளித்தது.

டிவேலரா கட்சி வலுத்தது. குடியரசுக் கட்சியினர் தேர்தலில் பெரு வெற்றி யடைந்தனர். இதன் பயனாக, டிவேலராவின் பேரும் புகழும் முன்னையினும் அதிகரித்தது.

அவர் 1932-ம் வருஷத்தில் ஐரிஷ் பிரதிநிதி சபையின் தலைவ ராகித் தமது கொள்கையை ஆதரிப்பவர்களை மந்திரிகளாக்கி ஆட்சி செலுத்தத் தொடங்கினர்.

இவ்விதம், டிவேலரா சுதந்திர அயர்லந்தின் முடிசூடா மன்னனான பிறகு, தாம் முன் ஒப்பந்தத்தில் விலக்கக் கருதிய நிபந்தனைகளை யெல்லாம் பிரதிநிதி சபை அங்கத்தினர்களின் அங்கீகாரத்தைப் பெற்றே ஒன்றன்பின் ஒன்றாக நீக்கி வந்தார். அவர் எதிர் கட்சியினரையுந் தழுவிக்கொண்டே அரசியல் காரியங்களைச் செய்துவருகிறார். இல்லாவிடில், அவரது கட்சி ஐரிஷ் பிரதிநிதி சபையில் பெரும்பான்மையாக இல்லா திருக்கும் சமயங்களில்கூட, தலைவராக இருந்து வர முடியா தல்லவா!

இப்போது ஐரோப்பாவில் நடைபெற்றுவரும் மகா யுத்தத்தின்பயனாக, பிற தேசங்களுக்கு ஏற்பட்டிருப்பது போலவே, அயர்லந்துக்கும் ஒரு சோதனையும் நெருக்கடியும் ஏற்பட்டிருக்கிறது. இதில் வெற்றி பெற்றுவிட்டால் அயர் லந்தின் சுதந்திரத்தை யாராலும் பறிக்க முடியாது. இவ் வளவு பெரிய நெருக்கடியிலும் டிவேலரா மனங் கலங்காது உறுதியாக இருந்து வருவதை அரசியல் அறிவுள்ளவர்கள் பாராட்டாதிருக்க முடியாது. அவர் வெறும் வாய்ப் பேச்சு வீரரல்லர்; செயலிலும் மகா வீரர் என்பதை, அவர் ஐரிஷ் தற்காப்புக்காகச் செய்துவரும் ஏற்பாடுகளே நிரூபிக்கக்கூடியனவா யிருக்கின்றன. கடந்த மகா யுத்தத் தின் பின் பெற்ற தாய்நாட்டுச் சுதந்திரத்தை, டிவேலரா இம் மகாயுத்தம் எவ்வளவு பயங்கரமா யிருந்தாலும், தமது சாணக்கியத்தாலும் வீரத்தாலும் அழியாமல் காப்பாற்றுவார் என்பது திண்ணம். எனவே, சுதந்திர அயர்லாந்து ஏமன் டிவேலரா தலைமையில் மேலும் சிறப்புற்று விளங்குமாக!

**பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!**

Printed at The Guardian Press, 40, Broadway, Madras—(111940)

உலகத்தில் நீங்கள் உயர்
பதவி அடைய வேண்டாமா?
சகலவித வசிய மர்மங்களை நீங்கள்
தெரிந்து கொள்ள வேண்டாமா??

**இவை எப்படி அடைவது?**

## வசீகரண தந்த்ரம்
அல்லது
## மனோவசிய சாஸ்த்ரம்

★

ஆசிரியர்:
**ஸ்வாமி ப்ரேமானந்த யோகீஸ்வரர்**

இதில், தாம் கோரிய பெண்ணை மணமுடித்தல், மணமகன் மணமகளுடைய காதலை விருத்தி செய்தல், மனமில்லா மனத்தை மகிழ்வு பெறச் செய்தல், பிரிவுற்ற தம்பதிகள் கூடுதல், வேண்டுமளவு சந்ததி பெறல், கணவரின் கெட்ட நடத்தைகளைத் திருத்துதல், பெண்களின் துர்நடத்தைகளை நிறுத்துதல், பேய் பிசாசுகளை ஓட்டுதல், சூனியம் திருப்புதல், பைத்தியம் போக்கடித்தல், முதலாக 100 ப்ரயோகங்கள் சிறுவர் முதல் பெரியவர் ஈறாக நன்கு அறிந்துகொள்ளும்படியாகச் சுலபமான நடையில் — இனிய மொழியில் — எழுதப்பட்டுள்ளன.

**விலை ரூபா இரண்டு** (தபாற் செலவு அணா 8.)

முன் பணமாக ரூபா இரண்டு மணி ஆர்டர் செய்தால் ஒரு காபி, வேறுவிதச் செலவின்றி தபால் மூலமாய் உடனே அனுப்பப்படும்

**எம். எஸ். ராமுலு கம்பெனி**
286, அப்பா பில்டிங்ஸ் :: எஸ்பிளனேட், மதராஸ்

## வடுவூர் - கே. துரைசாமி ஐயங்கார்
## இன்பத்தேன் பொழியும் நடையில் எழுதிய
## தித்திக்கும் புதுமையான நாவல்கள்

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| 1. திகம்பர சாமியார் } பால்யலீலை 2-பாகம். } | 4 | 8 | 18. நீலலோசனி ... | 1 | 2 |
| | | | 19. கலியாணசுந்தரம் ... | 1 | 2 |
| 2. புஸ்பாங்கி 2-பாகம். | 3 | 8 | 20. நங்கை மடவன்னம் | 1 | 2 |
| 3. மிஸிஸ் லீலா மோகினி | 3 | 0 | 21. சிங்கார சூர்யோதயம் | 1 | 2 |
| 4. மன்மதபுரி மூடு மந்திரம் | 2 | 12 | 22 பூச்சாண்டி எம்மே! | 1 | 2 |
| 5. கனகாம்புஜம் ... | 2 | 12 | 23. சோமசுந்தரம் ... | 1 | 2 |
| 6. சுயமரணபுரி மர்மம் ... | 2 | 8 | 24. டாக்டர் சோணாசலம் | 1 | 2 |
| 7. தில்லைநாயகி ... | 2 | 4 | 25. பச்சைக் காளி ... | 1 | 2 |
| 8. துரைக்கண்ணம்மாள் | 2 | 4 | 26. சமயசஞ்சீவி ... | 1 | 2 |
| 9. சதானந்த சாமியார் ... | 2 | 4 | 27. சொக்கன் செட்டி ... | 1 | 2 |
| 10. படாடோப சர்மா ... | 2 | 4 | 28. பூஞ்சோலையம்மாள்... | 1 | 2 |
| 11. லக்ஷ்மீகாந்தம் ... | 2 | 0 | 29. தங்கம்மாள் ... | 1 | 2 |
| 12. திரிபுரசுந்தரி ... | 2 | 0 | 30. சிவராமகிருஷ்ணன்... | 1 | 2 |
| 13. காந்திமதி ... | 1 | 12 | 31. பிச்சுமுத்துக் கோனான் | 1 | 2 |
| 14. மருங்காபுரி மாயக்கொலை | 1 | 4 | 32. பாவாடைச் சாமியார் | 1 | 2 |
| 15. இராஜேந்திர மோகனா | 1 | 4 | 33. நவநீதம் ... | 1 | 2 |
| 16. வஸந்த கோகிலம் ... | 1 | 4 | 34. துரைராஜா ... | 1 | 2 |
| 17. முத்துலக்ஷ்மீ ... | 1 | 4 | 35. மாயசுந்தரி ... | 0 | 12 |

மேற்குறித்த நாவல்களில் எவை தேவையோ அதன் கிரயத்தை முன்பணமாக மணி ஆர்டர் செய்துவிட்டால் தபாற்செலவின்றி அனுப்பப்படும். ரூபா நாற்பது மணி ஆர்டர் செய்தால் மேற்குறித்த ரூபா 58—10—0 விலைகொண்ட 35-நாவல்களையும் வேறுவிதச் செலவின்றி ரயில்வே பார்சல் மூலமாய் அனுப்பி வைக்கப்படும். வெளி நாட்டினர் ரூ. 45. அனுப்ப வேண்டும், அல்லது £.3-sh.8-க்கு British Postal Order வாங்கியனுப்பவேண்டும். எக்காரணங்கொண்டும் புத்தகங்கள் வி. பி. மூலமாய் அனுப்பப்படுவதில்லை.

**எம். எஸ். ராமுலு கம்பெனி**
**286 — எஸ்பிளனேட் — மதராஸ்**

# ராமுலு புதிய
# ஸங்கீத பிரசுரங்கள்

இவை சென்ற நான்கு தசாப்தங்களாகப் பற்பல ஸங்கீதப் புத்தகங்களை எழுதிப் பிரசுரம் செய்து ஸங்கீத உலகத்திற்குப் பேருதவி புரிந்த ஸங்கீத ஸாகித்ய பரத சாஸ்திர வித்வான் பிரம்மஸ்ரீ கெ. வி. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் அவர்களால் ஸ்வர ஸாஹித்யங்களுடனும், ராக லக்ஷணங்களுடனும், குறிப்புக்களுடனும் மற்றும் அனேக சீர்திருத்தங்களுடன் பிழையின்றி புதிதாய்த் தயாரித்த அரிய பெரிய புத்தகங்கள். இவை நான்கும் துரைத்தனத்தார் அங்கீகரித்தவை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ராமுலு ஸங்கீத சிந்தாமணி .... | 3 | 0 | 0 |
| 2. | ராமுலு திராவிட கானம் .... | 3 | 0 | 0 |
| 3. | ராமுலு ஸங்கீத சில்லரைக் கோவை.... | 3 | 0 | 0 |
| 4. | ராமுலு கீர்த்தன ரத்னங்கள் (300).... | 1 | 4 | 0 |

முக்கிய கவனிப்பு :—இப்புத்தகங்கள் ஸங்கீதாபிமானிகளுக்கும், ஸங்கீத உபாத்தியாயர்கட்கும் ஒரு பெரிய நிதியாகும் என்பதை யாம் எடுத்துக் காட்டவேண்டியதில்லை. முழு விபரமான கீர்த்தனங்களின் அட்டவணையுடன் கூடிய கேட்லாக்கு வேண்டுபவருக்கு இனமாய் அனுப்பப்படும். முன் பணமாக ரூபாய் 6—8—0 மணி ஆர்டர் செய்தால் மேற்சொன்ன நான்கு ஸங்கீத புத்தகங்களும் வேறுவிதச் செலவின்றி ரயில் பார்சல் மூலமாய் அனுப்பிவைக்கப்படும். பர்மா, சிலோன், சிங்கப்பூர், பினங்கு முதலிய தேசத்திலுள்ளவர்கள் ரூபா 7—8—0-க்கு மணி ஆர்டர் அல்லது 12. sh-க்கு British Postal Order அனுப்பவேண்டும். புத்தகங்களை வி. பி. மூலமாய் அனுப்பப்படமாட்டாது.

**எம். எஸ். ராமுலு கம்பெனி**

**286, அப்பா பில்டிங்ஸ் :: எஸ்பிளனேட், மதராஸ்**

RAMULU PAMPHLETS ON

# Ancient and Modern Magnates

Are you ahead of the times and have an intimate knowledge of the tremendous men who shaped the destinies of the world? Well, may we introduce you to them through our series of sketches of great Prophets, Philosopers, Dictators, National Leaders, Scientists etc? Here are already a few sketches to be followed by many more. These sketches have been written in simple, chaste and idiomatic English, and provide interesting and instructive reading, not easily to be had even in high priced books. We have secured the services of brilliant authors and have **deliberately priced** these books at ONE ANNA each so that they may be within the easy reach of one and all.

| | | |
|---|---|---|
| 1. | *Mahatma Gandhi—*A Life Sketch in English* | 0 1 0 |
| 2. | *Gopal Krishna Gokhale ,, ,, ... | 0 1 0 |
| 3. | *Rabindranath Tagore ,, ,, ... | 0 1 0 |
| 4. | *Sri Aurobindo Ghose ,, ,, ... | 0 1 0 |
| 5. | *Sri Ramana Maharshi ,, ,, ... | 0 1 0 |
| 6. | *Sri Ramakrishna ,, ,, ... | 0 1 0 |
| 7. | *Swami Vivekananda ,, ,, ... | 0 1 0 |
| 8. | *Dr. Anni Besant ,, ,, ... | 0 1 0 |
| 9. | *Napoleon Bonaparte ,, ,, ... | 0 1 0 |
| 10. | *Kemal Pasha (*Dictator of Turkey*) ,, ... | 0 1 0 |
| 11. | *Joseph Stalin (*Dictator of Russia*) ,, ... | 0 1 0 |
| 12. | *Eamon De Valera (*President of Ireland*) ... | 0 1 0 |
| 13. | *Franklin D. Roosevelt (*President of America*) | 0 1 0 |
| 14 | *Winston Churchill (*Premier of England*) | 0 1 0 |
| 15. | †*Adolf Hitler (*Dictator of Germany*) ,, ... | 0 1 0 |
| 16. | †*Benito Mussolini (*Dictator of Italy*) ,, ... | 0 1 0 |
| 17. | †*Subhas Chandra Bose ,, ... | 0 1 0 |
| 18. | †*Pandit Jawaharlal Nehru ,, ... | 0 1 0 |
| 19. | "Periyar" E.V.R.—*A Life Sketch in Tamil*—.. | 0 1 0 |
| 20. | Bhagavath Geetha...—*In Tamil Prose*— ... | 0 1 0 |

** TAMIL AND † TELUGU EDITIONS ALSO AVAILABLE*

Copies will be sent on receipt of **Indian** Postage stamps of the value *plus* nine pies for Postage for **each copy**

**M. S. RAMULU & CO., ESPLANADE, MADRAS**

# RAMULU'S NEW MODEL

# SPECIALS

We have brought this **Ramulu's New Model Specials** with the help of able and experienced authors for the especial benefit of students. A set of these books in the hands of a student is sure to be of great help and an indispensable treasure chest, helping him to avoid hit and miss methods in his school works. Our single aim in bringing out these **Ramulu's New Model Specials** is to make students successfully fit for the otherwise hard task of prosecuting their studies. We have **deliberately priced** these books at ONE ANNA each so as to enable one and all to be in possession of them.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | Ramulu's Letter-writer *(101 Letters; 64 p.)* | 0 | 1 | 0 |
| 2. | Ramulu's Select Essays *(60 Essays; 64 p.)* | 0 | 1 | 0 |
| 3. | Ramulu's English Dictionary—*64 pages*— | 0 | 1 | 0 |
| 4. | Ramulu's English—Tamil Dictionary ... | 0 | 1 | 0 |
| 5. | Ramulu's English—Telugu Dictionary ... | 0 | 1 | 0 |
| 6. | Ramulu's Tamil-Tamil-Eng. Dictionary ... | 0 | 1 | 0 |
| 7. | Ramulu's Ready-made Speeches (40) ... | 0 | 1 | 0 |
| 8. | Ramulu's Dialogues And Debates (40) ... | 0 | 1 | 0 |
| 9. | Ramulu's 1001 Idioms And Phrases ... | 0 | 1 | 0 |
| 10. | Ramulu's 1001 English-Tamil Phrases ... | 0 | 1 | 0 |
| 11. | Ramulu's 1001 Select English Proverbs ... | 0 | 1 | 0 |
| 12. | Ramulu's 1001 Select Telugu Proverbs ... | 0 | 1 | 0 |
| 13. | Ramulu's 1001 Select Tamil Proverbs ... | 0 | 1 | 0 |
| 14. | Ramulu's 501 Parallel Tamil-Eng. Proverbs | 0 | 1 | 0 |
| 15. | Ramulu's 501 Parallel Telugu-Eng. Proverbs | 0 | 1 | 0 |
| 16. | Ramulu's 501 Riddles And Puzzles ... | 0 | 1 | 0 |
| 17. | Ramulu's 501 New Laughing-Gas Tit-Bits | 0 | 1 | 0 |
| 18. | Ramulu's Encylopedia for Students ... | 0 | 1 | 0 |

Copies will be sent on receipt of **Indian** Postage stamps of the value *plus* nine pies for Postage for **each copy**

## M. S. RAMULU & CO

**286, Appah Buildings :: Esplanade, Madras**

*Agents* ;—P. T. BELL & CO, G.T., MADRAS